செய்தி இதழாகப் பதிவு பெற்றது.

# சிந்தாமணி

ரூ 2/50

THE MOST INFLUENTIAL TAMIL WEEKLY WITH THE LARGEST CIRCULATION IN SRI LANKA

CHINTAMANI    இல. 718    1983 செப்டம்பர் 11 ஞாயிற்றுக்கிழமை ★ ★    சிந்தாமணி



மலரம்பு தாங்கி வரும் மாரனும் மயங்குவான் — நின் மதிமுகத்து விழி நோக்கி கலை தொடுக்கத் தயங்குவான். பல மாலை பட்ட வென்ற வீரரும் ஒருகரம் — நேரத் தலைபோலும் எழில் நோக்கி தலைகுனிந்து போவர்.

## விமானம், கப்பலில் வந்த ஆயுதங்கள்: எகிப்துக்கும், கிறீஸுக்கும் பொலீஸ் குழு

கொழும்பு, செப். 11

இலங்கைக்கு பெருமளவு ஆயுதங்கள் கப்பலிலும், விமானத்திலும் கொண்டு வரப்பட்ட போது வெளிநாடுகளில் பிடிபட்ட சம்பவங்கள் தொடர்பாக ஆராய்ந்து விவரங்களைத் திரட்டவென மூவரைக் கொண்ட உயர்மட்ட பொலீஸ் குழு ஒன்றை எகிப்துக்கும், கிறீஸுக்கும் அரசாங்கம் அனுப்பவிருக்கிறது.

அடுத்த வாரத்தில் அவர்கள் புறப்பட்டுச் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சிறில் ஹேரத் தலைமையில்

புலனாய்வுச் சேவைப் பிரிவின் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு. சிறில் ஹேரத் இந்தப் பொலீஸ் குழுவுக்குத் தலைமை வகித்துச் செல்வாரெனவும் தெரியவருகிறது.

இலங்கைக்கு வரவிருந்த கப்பல் ஒன்றை பெருமளவு ஆயுதங்களுடன் சூயஸ் கால்வாயில் வைத்து எகிப்திய அதிகாரிகள் கைப்பற்றியிருந்தனர்.

மேற்படி "ஐஸ்லைபீ" என்ற சரக்குக் கப்பலில் இரண்டரை தொன் நிறையுள்ள துப்பாக்கிகள், சன்னங்கள், என்பன இருக்கக் கண்டுபிடிக்கப்பட்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# 2,000 பொலீஸாருக்கு இராணுவப் பயிற்சி

## நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்த ஏற்பாடு

—"சிந்தாமணி, நிருபர்: இரா. செல்வராஜா —

கொழும்பு, செப். 11

2,000 பொலீஸாருக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்படும், இராணுவப் பயிற்சி பெறும் பொலீஸார், பொலிஸ் நிலைக்களத்தில் இயங்கி வரும் அதிரடிப் படைப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அதிரடிப் படைப் பிரிவு தற்போது யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் செயற்பட்டு வருகின்றது.

தெற்கால நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டு வருகிறது. நாட்டின் பாதுகாப்பை பலப் படுத்துவதே இதன் நோக்கம் ஆகும்.

அதே சமயம் நவீன ஆயுதங்களை வெளிநாடுகளில் இருந்து வாங்கவும் பொலீஸ் நிலையங்களை நவீனப்படுத்தவும், கூடுதலான ஆட்களை பொலீஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளவும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பொலீஸ் படையை பலப்படுத்த வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு, கிழக்கிலும், தெற்கிலும் ஏற்பட்டுள்ள நிலைமைகளை அனுசரித்து இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பொலீஸாருக்கு இராணுவப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் பயங்கரவாதிகளை எதிர்த்து சண்டையிடவும் பொலீஸ் நிலையங்களை பாதுகாக்கவும் பயிற்சி அளிக்கப்படும். திடீர் கலவரங்களை முறியடிக்கும் பயிற்சிகளும் வழங்கப்படும்.

இதே வேளையில் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக கூடுதலான பணம் ஒதுக்கப்படும். (த-மு)

## இந்திய செய்மதியை தாக்கிய மர்ம பொருள் என்ன?

புதுடில்லி, செப். 10

இந்திய தகவல் செய்மதி, விண்வெளியை நோக்கி ஏவப்பட்ட பொழுது இனம் தெரியாத பொருள் ஒன்றினால் தாக்கப்பட்டதாக இந்திய விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்க விண்வெளிக் கப்பலான சலேஞ்சர் இந்த செய்மதியை விண்வெளிக்கு எடுத்துச் சென்றதும் —

செய்மதியில் கோளாறு ஏற்பட்டு அது சரிவர இயங்க மறுப்பதும் தெரிந்ததுவே.

செய்மதி விண்வெளியில் இனம் தெரியாத பொருள் ஒன்றினால் தாக்கப்பட்டதே அதில் கோளாறு ஏற்படக் காரணம் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். (த)

## பாதிக்கப்பட்ட ஊழியருக்கு மேலதிக நிவாரணம்

பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு மேலும் நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழு ஈடுபட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட ஊழியரிடம் இருந்து மேலதிக விவரங்களை பிரஸ்தாப இணைப்புக் குழு கோரி இருக்கிறது.

ஒரு வார காலத்துக்குள் கிடைக்கத்தக்கதாக செயலாளர், 54, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி பாதிக்கப்பட்ட ஊழியர்கள் அறிக்கை மூலம் கோரப்பட்டுள்ளனர். (த-120)

## தமிழ் மாணவர் பரீட்சைஎழுதவில்லை

ஹரிஸ்பத்துவ, செப். 10

பேராதனை பல்கலைக் கழகத்திலும் தும்பறை வளாகத்திலும் பொதுக் கலைத் தேர்வு, கலைமாணி (பகுதி 1) பரீட்சைகள் வெள்ளிக்கிழமை ஆரம்பமான போதிலும் தமிழ் மாணவர்கள் எவரும் பரீட்சை எழுத வந்திருக்கவில்லை.

தமிழ் மாணவர்கள் தன் பேராதனை பல்கலைக் கழக மண்டபத்திலும், முஸ்லிம் மாணவர்கள் தும்பறை வளாகத்திலும் பரீட்சை எழுத ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முஸ்லிம் மாணவர்கள் பரீட்சை எழுத வந்திருந்தனர். (த-ப-105)

## மீண்டும் திறக்க நடவடிக்கை

தாக்குதல், கொள்ளை சம்பவங்களை அடுத்து வட பகுதியில் மூடப்பட்ட தபால் அலுவலகங்களை மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிகிறது.

சமீபத்தில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து வடக்கில் 3 தபால் அலுவலகங்களும் 12 உப தபால் அலுவலகங்களும் மூடப்பட்டன. அவற்றுள் வட்டுக்கோட்டை தபால் அலுவலகம் மட்டும் கடந்த திங்கட்கிழமை முதல் மீண்டும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# வாழ்க்கைச் செலவுப் படி 106 ரூபாவால் அதிகரிப்பு

## அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு

கொழும்பு, செப். 11

அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்கள் பெறும் வாழ்க்கைச் செலவுப்படி 106 ரூபாவால் அதிகரிக்கும். இம்மாதம் முதல் இந்த அதிகரிப்பை வழங்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

கடந்த மார்ச் பட்ஜட்டில் 100 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கியதுடன், வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வுக்கு ஏற்ப வாழ்க்கைச் செலவுப்படி உயர்வதை அரசு நிறுத்தி வைத்தது.

ஆறு மாதங்களின் பின் இந்த முடிவு மீளாய்வு செய்யப்படும் என்று அப்போது நிதியமைச்சர் அறிவித்திருந்தார்.

அதன்படி வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வுக்கு ஏற்ப, வாழ்க்கைச் செலவுப் படியை இம்மாத சம்பளத்துடன் அதிகரித்து வழங்குவது என அரசு முடிவு செய்திருக்கிறது.

வாழ்க்கைச் செலவுப் படியாக 140 ரூபாவை அரசு ஊழியர்கள் பெற்று வந்தனர். இம்மாதத்தில் அது 246 ரூபாவாக அதிகரித்து வழங்கப்படும்.

ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்த சம்பளம் பெறும் அரசு ஊழியர்களே இந்த வாழ்க்கைச் செலவுப் படியைப் பெறுகிறார்கள்.

அதே வேளை, 999 ரூபாவைச் சம்பளமாகப் பெற்று, வாழ்க்கை செலவுப்படி சேர்க்கப்படு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வல்லையில் இனம் தெரியாத சடலம்

கோப்பாய், செப். 11

வல்வெட்டித்துறை பொலீஸ் பகுதியைச் சேர்ந்த வல்லையில் இனந் தெரியாத ஆணின் சடலம் ஒன்று கிடக்கக் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.

இவர் 40 அல்லது 45 வயது மதிக்கத்தக்கவர், வல்லைவெளி வீதி மரம் ஒன்றுக்கு அருகில் சடலம் கிடந்தது. மஸ்லின் கோடுடைய சிவப்பு சாரம் கட்டியிருந்தார். அருகில் சேர்ட் கழற்றிப் போட்டுக் கிடந்தது.

வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறை பொலீஸார் சடலத்தைக் கண்டெடுத்தனர். யாழ் பெரியாஸ்பத்திரி சவச்சாலையில் சடலம் வைக்கப்பட்டிருக்கிறது.

சடலத்தை அடையாளம் காண விரும்புபவர்கள் யாழ் பெரியாஸ்பத்திரி பொலீஸாருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

யாழ் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சுப்பிரமணியம் இன்று பிரேத பரிசோதனை நடத்தினார். சடலத்தில் முறிவுக் காயங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-ப-142)

## தமிழ் நாடு அமைச்சரவை விஸ்தரிப்பு

கொழும்பு, செப். 10

தமிழ்நாடு அமைச்சரவையில் மேலும் நான்கு அமைச்சர்கள் புதிதாக பதவி ஏற்றனர்.

திரு. ஆர். சௌந்தரராஜன், ஜனாப் வை. எஸ். எம். யூசுப், திரு. கே. கலைமணி, திரு. ஆர். அருணாசலம் ஆகியோரே இந்த நால்வரும் ஆவர். (த-16)

## அத்துமீறி குடியேறியோரை வெளியேற்ற முடிவு

மட்டக்களப்பு, செப். 10

கல்குடா தொகுதியில் உள்ள வடமுனை குடியேற்றத் திட்டத்துக்கு அருகாமையில் உள்ள பகுதியில் அத்துமீறிக் குடியேறியவர்கள் வெளியேற்றப்படுவார்கள்.

அத்துமீறிக் குடியேறியவர்களை உடனடியாக வெளியேற்றும்படி அரசாங்க அதிபருக்கு விசேஷ உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அத்துமீறல் குறித்து கல்குடா எம். பியும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருமான திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் ஜனாதிபதியிடம் முறையிட்டிருந்தார். (த-142)

சத்தியப்பிரமாணம் எடுப்பதில் தவறு விட்டதால்

# நீதியரசர்கள் பதவி இழந்தனரா?

கொழும்பு, செப். 11

உயர் நீதிமன்ற, அப்பீல் நீதிமன்ற நீதியரசர்கள் அனைவரும், பிரிவினையை ஆதரிப்பதில்லை என்று, அரசமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்துக்கு விசுவாசம் தெரிவித்து ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம் எடுக்கத் தவறியதால் பதவி இழந்தனரா?

10 உயர் நீதிமன்ற நீதியரசர்களும், 12 அப்பீல் நீதிமன்ற நீதியரசர்களும் இவ்வாறு பதவி இழந்துள்ளனர்.

சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கான கால எல்லை இம்மாதம் 7ஆம் திகதியுடன் முடிவடைந்தது தெரிந்ததே.

உயர் நீதிமன்ற, அப்பீல் நீதிமன்ற நீதியரசர்கள் சத்தியப் பிரமாணப் படிவங்களை நிரப்பி, தங்கள் சக நீதியரசர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுத்திருந்தனர்.

ஆனால் அரசமைப்பின் 157 (அ) சரத்தின் 7ஆவது உப விதியின் பிரகாரம் நீதியரசர்கள் ஜனாதிபதி முன்னிலையிலேயே

(2 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய நீதியரசர் நியமனம் பற்றி ஜனாதிபதி அறிவிப்பார்

கொழும்பு, செப். 11

உயர்நீதிமன்ற, அப்பீல் நீதிமன்ற நீதியரசர்கள் அனைவரும் பதவி இழந்திருப்பதால், புதிய நீதியரசர்களாக நியமனம் பெறுவோரின் பெயர்களை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நாளை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய நியமனத்தின் போது இப்போதைய நீதியரசர்களில் சிலர் மாற்றப்படுவார்கள் என்றும் நம்பிக்கையாகத் தெரிய வருகிறது.

அதேவேளை இம்மாதம் 7ஆம் திகதியின் பின்னர் நடந்த உயர் நீதிமன்ற அப்பீல் நீதிமன்ற விசாரணைகள் செல்லுபடியாகா என்றும் அரசாங்க வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (த-ப)

## பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் பற்றி ஆராய்வு

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு அரசடி மகா வித்தியாலயத்தில் நடைபெறுகிறது.

சமீபத்திய கலவரங்களால் இடம் பெயர்ந்த ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் ஆகியோரின் நிலை குறித்து கூட்டத்தில் ஆராயப்படும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. டி. எஸ். கே. வனசிங்கா தலைமையில் கூட்டம் நடைபெறும். (த-42)

ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்

## யாழ். சிறையில் இருந்துதப்பியவர் மீண்டும் கைது

கொழும்பு, செப். 11
அண்மையில் யாழ். சிறைச்சாலையில் இருந்து தப்பிய 12 கைதிகளில் ஒருவரான தம்பிராஜா என்பவர் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு செல்லும் ரயிலுக்காக பளை ரயில் நிலையத்தில் இவர் காத்திருந்த போது சாவகச்சேரி பொலிஸார் இவரைக் கைது செய்தனர்.

பல கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக இவர் தீவிரவாத இளைஞர்களினால் தேடப்பட்டு வந்தவர் என்று கூறப்படுகிறது. (த)

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்



முகம்மது அஸ்மி

காத்தான்குடி, 5ம் குறிச்சி, ஊர் வீதியில் வசிக்கும் அப்துல் நசார், அஜிபா பீபி தம்பதியரின் செல்வப் புதல்வன் முகம்மது அஸ்மி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 11.9.83 ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் இறைவனுதவியால் கொண்டாடுகிறார். இவரை உம்மா, வாப்பா, உம்மும்மா, உம்மாவாப்பா, சாச்சிமார், குடும்பத்தினர் மற்றும் பெத்தா, அப்பாமார், மாமிமார், மாமாமார், மச்சான்மார், மச்சிமார், சாச்சா மற்றும் குடும்பத்தினர் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

வி. இ: 166180

## வரட்சி நிவாரணமாக ரூ. 30 லட்சம்

கொழும்பு, செப். 11
இரத்தினபுரி மாவட்டத்தில் பாதிப்புற்ற இருபத்தையாயிரம் விவசாயக் குடும்பங்களுக்கு முப்பது லட்சம் ரூபா வரட்சி நிவாரணமாக வழங்கப்படவிருக்கிறது.

சமூக சேவைகள் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மேற்படி நிவாரண உதவி பணமாகவும், உணவு முத்திரை மூலமும் வழங்கப்படும்.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள ஆறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளே மேற்படி வரட்சியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இலங்கையைப் பிரிக்கும் கொள்கை உடையோரை பேச்சுக்கு அழைக்க அரசு எண்ணவில்லை!

## அமிருக்கு ஜனாதிபதி எழுதிய கடித விபரம்

கொழும்பு, செப். 11
இலங்கையைப் பிரிப்பதையோ, தனி நாடு அமைப்பதையோ கொள்கையாகக் கொண்டவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைக்க அரசாங்கம் எண்ணவில்லை.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு ஆகஸ்ட் 2ஆம் திகதி எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்ட அக்கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது—

உங்கள் திகதியிடப்படாத கடிதம் 1983 ஆகஸ்ட் 15 ஆம் திகதி கிடைத்தது. உங்களது செப்டம்பர் முதலாம் திகதிய கடிதத்தில் உத்தியோக பற்றற்ற முறையில் உங்களது பிரச்சினைகளைவிட்டுப் பேசுவதற்கு சந்தர்ப்பம் தரும்படி கேட்டிருந்தீர்கள். இது சம்பந்தமாக பேசுவதற்கு செப்டம்பர் 3ஆம் திகதி காலை 10 மணிக்கு ஜனாதிபதி இல்லத்தில் சந்திக்க முடியும்.

வட்டமேசை மாநாடு பற்றி என்னுடன் பேச விரும்பினால், அரசின் கருத்து இதுவே. அதாவது ஐ. தே. கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட யோசனைகளை அமுல் செய்வது பற்றி ஆராயவே வட்டமேசை மாநாடு கூட்டப்பட வேண்டும்.

அந்த யோசனைகள் பின்வருமாறு:— ஐ. தே. கட்சி பதவிக்கு வந்ததும் கல்வி, குடியேற்றம், தமிழ்மொழி உபயோகம், அரசாங்க, அரசாங்க கூட்டுத்தாபனங்களில் தொழில் வசதி ஆகியவை தொடர்பாக சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி அதன் முடிவை அமுல் செய்யும் என்பதாகும்.

1977 பொதுத் தேர்தலில் எமக்கு பெரும்பான்மை அதிகாரம் கிடைத்தது. இதனை அரசாங்கம் அமுல் செய்து வந்தது.

அரசமைப்புச் சட்டத்தின்படி நாடாளுமன்ற தெரிவுக்குழு இருந்ததால் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியபடி வட்டமேசை மாநாடு கூட்டப்படவில்லை.

அவர்கள் கட்சித் தெரிவுக் கமிட்டியில் பணியாற்ற மறுத்தது. இலங்கையைப் பிரிப்பதையோ, தனிநாடு அமைப்பதையோ கொள்கையாகக் கொண்டவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைக்க அரசாங்கம் எண்ணவில்லை.

1983 ஜூலை 20 புதன்கிழமை திட்டமிடப்பட்டிருந்த அந்த வட்டமேசை மாநாட்டுக்கு வரும்படி உங்கள் கட்சியை அழைத்தது ஞாபகம் இருக்கலாம். உங்கள் கட்சி எனது அழைப்பை ஏற்க விரும்பவில்லை.

இப்படி ஜனாதிபதியின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## வாழ்க்கைச் செல...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வதால் சம்பளம் 1000 ரூபா எல்லையைத் தாண்டும் ஊழியர்களும் 106 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி உயர்வைப் பெறுவார்கள்.

அதே வேளை அடுத்த வரவு-செலவு திட்டத்தில் அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட மாட்டாதுஎன தெரிய வருகிறது.

நிதி அமைச்சின் பொருளாதார துறையினர் இதற்கான பொர்லை அமைச்சுக்கு தெரிவித்துள்ளனராம்.

அண்மையில் ஏற்பட்ட கலவரங்களின் பிரதிபலிப்பாக இம்முறை வரவு - செலவு திட்டத்தில் 900 கோடி ரூபா துண்டு விழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வரவு — செலவு திட்டத்தில் துண்டு விழும் தொகையை எவ்வாறு சரி செய்வது என நிதி அமைச்சின் அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

சம்பளங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் செலவினங்களில் 20 அல்லது 25 சதவீதம் வெட்டு விழும் என நிதி அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

போக்குவரத்து செலவு, மின்சார கட்டண உயர்வு, எரிபொருள் ஆகியவற்றின் விலைகள் உயர்ந்துள்ளதால் பொது மக்கள் கஷ்டப்படுகின்றனர் என்பதை நிதி அமைச்சு ஏற்றுக் கொள்ளும். அதே வேளை அண்மைக்கால கலவரத்தினால் சேதமுற்ற கட்டடங்களை திருத்தி நாட்டை பொருளாதார அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டி இருப்பதால் சம்பள உயர்வு சாத்தியப்படாது எனக் கூறப்படுகிறது. (த—ப—மு)

## யாழ். பல்கலைக்கழக பரீட்சைகள் ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 11
யாழ். பல்கலைக்கழக பட்டப் பரீட்சைகள் பின்போடப்பட்டிருக்கின்றன. பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இதனை அறிவித்துள்ளார்.

பொதுக்கலை, கலைமாணி பட்டப் பரீட்சை (பாகம் 1) அக்டோபர் 4ஆம் திகதி நடைபெறும்.

சிறப்பு கலைமாணி பட்டப் பரீட்சை (பாகம் 1) வர்த்தக பட்டப் பரீட்சை (பாகம் 1) விஞ்ஞான, வர்த்தக திருவாக பட்டதாரிப் பரீட்சை (பாகம் 1) ஆகியவை அக்டோபர் 17 ஆம் திகதி ஆரம்பமாகும்.

கல்வி டிப்ளோமா பரீட்சை, விஞ்ஞானத்துறை முதலாம், இரண்டாம் பாகம் ஆகிய செயல் முறைப் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

விஞ்ஞானத்துறை முதல் பரீட்சை அக்டோபர் 24 ஆம் திகதி நடைபெறும்.

விசேஷ கலைமாணிப் பட்டம் (பாகம் 2, 3) பொதுக் கலைமாணிப்பட்டம் (பாகம் 2) வர்த்தக பட்டதாரிப் பரீட்சை (பாகம் 2, 3), இராமநாதன் இசைக் கல்லூரிப் பரீட்சைகள், விஞ்ஞானத்துறை (பாகம் 2, 3) ஆகிய பரீட்சைகள் முன்பு குறிப்பிட்ட தினங்களில் நடைபெறும். (த)

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

6.02 டோய் பொக்ஸ்
6.30 "பெல் பவுண்டின்"
6.45 எக்சலெறியிக்ஸ் மேட்சனி
7.00 செய்திகள் – தமிழ்
7.15 "நெச்சர்"
7.45 "மான் ஓப் வீட்"
8.15 செய்திகள் – சிங்களம்
8.30 நந்தன – விந்தன
9.30 செய்திகள் – ஆங்கிலம்

### ஐ. டி. என்

6.31 பிளே பொக்ஸ்
7.00 செய்திகள் – தமிழ்
7.15 த கிங் கிளோட் ஷோ
7.30 ரிக் அன்ட் ப்ரீட்
7.45 கோஸ்ட் அன்ட் மிஸில் முவர்
8.15 செய்திகள் – சிங்களம்
8.30 "புட்போல் இன்டரநெசனல்" இலங்கைக்கும் கோரியாவுக்குமிடையேயான சுகததாச விளையாட்டரங்கு திறப்பு விழாவன்று நடைபெறும் முதலாவது ஆட்டம்.
9.30 செய்திகள் – ஆங்கிலம்
9.45 "புட்போல் இன்டரநெசனல்" – தொடர்ச்சி

## பண்டாரவளையில் சகஜ நிலை

பண்டாரவளை, செப். 10
அண்மையில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களுக்குப் பிறகு, பண்டாரவளைப் பகுதியிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் வியாபாரம் சகஜ நிலைக்கு திரும்ப ஆரம்பித்துள்ளது.

வன்செயல் சம்பவங்களின் போது பண்டாரவளை நகரில் ஏறக் குறைய நூறு வியாபார ஸ்தாபனங்கள் இக்கிரையாக்கப்பட்டன.

அது போலவே நாற்பதுக்கும் மேற்பட்ட வீடுகள் தீயில் எரிந்து சாம்பலாகின.

பாதிப்புக்கு உள்ளாகாத கடைகளில் வியாபாரம் நடைபெற்று வருவதுடன், மூடிக் கிடந்த பல கடைகளும் இப்போது திறக்கப்பட்டு விட்டன. (க-39)

# கத்தி, கோடரி வெட்டுக்கு மூன்று இளைஞர்கள் பலி

## பழைய பகையின் எதிரொலி என அறிவிப்பு

சாவகச்சேரி, செப். 10
பழைய கொலைச் சம்பவம் ஒன்றின் எதிரொலியாக மூன்று வாலிபர்கள் உயிரிழந்தனர்.

கத்தி, கோடரி வெட்டுக்களுக்கு ஆளான இளைஞர்கள் மூவரும் வீதியில் இரத்த வெள்ளத்தில் துடி துடித்து இறந்தனர்.

இப் பரபரப்பூட்டும் சம்பவம் சாவகச்சேரி பொலிஸ் பகுதியைச் சேர்ந்த மந்துவில் என்னுமிடத்தில் இடம் பெற்றது.

சின்னக்குட்டி சின்னா - 28 வயது, தனாத்திலம் வைகுந்த வாசன்-23 வயது, சின்னத்தம்பி தம்பு வடிவேலு-19 வயது ஆகிய மூவருமே, இறந்தவர்களாவர்.

சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ரஞ்சித் டிசில்வா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி தீவிர புலன் விசாரணை மேற்கொண்டது.

சாவகச்சேரி பதில் மாஜிஸ்திரேட் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினார்.

இக் கொலைச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:— மந்துவிலைச் சேர்ந்த இராமசின்னத்தம்பி என்பவர் கடந்த ஆண்டு கொலை செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து பழிக்குப் பழி வாங்கும் நிகழ்ச்சியாக இந்த முக் கொலைச் சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

இந்த முக் கொலைச் சம்பவம் தொடர்பாக அதே ஊரைச் சேர்ந்த சின்னக்குட்டி கந்தையா, முத்தன் வேலுப்பிள்ளை உட்பட மேலும் இருவரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் தேடி வருகிறார்கள்.

இந்த வாலிபர்கள் முன்னைய கொலை வழக்கின் சந்தேக நபர்கள் ஆவர்.

இவர்கள் இப்பொழுது பிணையில் விடப்பட்டு, பிரதி ஞாயிறு தோறும் பொலிஸ் நிலையத்தில் ஆஜராகி வருபவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-51)

## விமானம்,...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
டன.

அவுஸ்திரேலியாவிலிருந்து வந்த இந்தக் கப்பல் திருத்த வேலைகளுக்காக நின்ற போது எகிப்திய அதிகாரிகள் அதில் ஆயுதங்கள் இருப்பதை கண்டு பிடித்தனர்.

இதற்கு முன்னர் இந்தக் கப்பல் கிரீஸின் ஏதென்ஸ் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டு பின் விடுவிக்கப்பட்டிருந்தது.

கிழக்கு பேர்லினில் இருந்து கிரீஸ் வந்து நின்ற விமானம் ஒன்றும் ஆயுதங்களுடன் கைப்பற்றப்பட்டதும் அந்த விமானமும் இலங்கை வர இருந்ததென்று தெரிவிக்கப்பட்டதும் அறிந்ததையே.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பாகவும் எகிப்து, கிரீஸ் அதிகாரிகளிடம் இருந்து இலங்கைப் பொலிஸ் குழுவினர் விபரங்களைத் திரட்டுவார்கள்.

எகிப்திய அரசாங்கம் ஏற்கனவே இலங்கைப் பொலிஸ் கோஷ்டிக்கு இதில் உதவ இணக்கம் தெரிவித்திருக்கிறது என்றும் அறியவருகிறது. (த-ப)

## சிந்தாமணி சிறு விளம்பரங்கள்

### பங்காளர் தேவை

தென் மாகாணத்தில் பிரபல வர்த்தக நிலையத்திற்கு 50,000/- முதலீடு செய்யக் கூடிய நேர்மையான முஸ்லிம் பங்காளர் தேவை. இலாபம் மூன்றாக பகிரப்படும். மனேஜர், 108, தால்ஸ்ட்ரோப் வீதி, கொழும்பு—12.

வி. இ: 166176

### பெண்களுக்கு

பெண்களின் மாதவிடாய் எல்லாவித தாமதமானாலும் உடன் நிவாரணம் பெறுவதற்கும், பாதுகாப்பான சிகிச்சை பெறுவதற்கும் சத்திரங்கள் பூரண சுகத்தின் பின் பணம் செலுத்தலாம். சிகிச்சை நிலையம் தினசரி திறந்திருக்கும். கிராஸ் கிளினிக் மரதன் கடவல.

வி. இ: 166174

### நியூமரலாஜி

நியூமரலாஜி அபிமானிகளின் பேராதரவுடன் எமது சேவையைத் தொடர்கிறோம். தத்தமது பிறந்த திகதிக்கேற்ப பெயரைத்தும், வாழ்க்கையின் இன்னோரன்ன பல அம்சங்களையும் அதிர்ஷ்டமாக்கிக் கொண்டு – மகிழ்ச்சிகரமாக வாழ விரும்புவோர் எமக்கு எழுதலாம்.

**Sulfika Buhary, 86, Horana Road, Eluwila — Panadura.**

வி. இ: 044447

### ஆடவர்களுக்கு!

ஆடவர்களே! உங்கள் அந்தரங்கமான உறுப்பில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் நிவர்த்தி செய்து கொள்ள விபரங்களுக்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்க. முகவரி— பீ. எம். திசாநாயக்கா, அரசாங்க பதிவு பெற்ற குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர், (நான்கு தேவாலய பிரதம தர்மகர்த்தா) 55, மிகுந்து மாவத்தை, கொழும்பு-12.

வி. இ: 009949

### மலையாள மாந்திரீகம்

ஆரம்பக் கல்வி முதல் பட்ட... சட்டப்படிப்பு மாணவர்களின் ஞாபக சக்தி – திறமைச் சித்தி போன்ற அனைத்தும் வசகூடக் கல்வி ஞானக் கவசம், மற்றும் ஆண், பெண், வசியம், வியாபார விருத்தி யந்திரம் இவைகளுக்கு 130/- மட்டுமே. இலவசத் தொடர்புகளில்லை. மணியோர்டருடன் தொடர்பு கொள்க. நேரிலெனில்... வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் வருக. சோதிடர் தத்துவஞானி, பீ. கே. சாமி, 33, இனச்சந்தை – நுவரெலியா.

வி. இ: 166175

### கட்டழகு

பெண்கள் கட்டழகுடன் திகழ, தனது உயரத்திற்கும் பருமனுக்கும் ஏற்ற மார்பகங்கள் அல்லாத மெலிந்த, நலிந்து போன பெண்களுக்கு அழகான பருமனான மார்பகங்களையும் தோற்றத்தையும் பெற விரும்பினால், சுயவிலாசமிடப்பட்ட முத்திரை கவருடன் தொடர்பு கொள்க. முகவரி: லீலாவதி அத்தநாயக்க, 55, மிகுந்து மாவத்தை, கொழும்பு-12.

வி. இ: 009949

### ஜோதிட கணிப்பு

* பிறந்த – ஜாதக குறிப்பு – 25/- * பிறந்த ஜாதகக் குறிப்பு – 55/- (புத்தக வடிவில்) * திருமணப் பொருத்தம் – 30/- * தற்போதைய பலன் அறிய – 15/- * எண் ஜாதகக் குறிப்பேடு – 55/- (நடந்த 4 – நடப்பது 5 வருடம்) இலவச கடிதத் தொடர்போ – வி. பீ. பீ. ஆடரோ கவனிக்கப்படமாட்டாது. மணியோர்டருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சோதிட தத்துவஞானி P. K. சாமி 33, இனச்சந்தை – நுவரெலியா.

வி. இ: 166175

### யந்திரம் மந்திரம்

யாருக்கும் சொல்ல முடியாத சொல்லியும் பலன் கிடைக்காத மனக்கஷ்டங்களா, காதலர்களுடைய பாசம் மாறும்படி இருக்க வேண்டுமா; கணவன் மனைவியிடையே உள்ள சச்சரவு வெறுப்பு சந்தேகம் தீர வேண்டுமா, குடும்பத்தில் அன்பும் சமாதானமும் நிலைக்க வேண்டுமா, தேவையான வர்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமா, இவை யாவற்றிற்கும் நிவாரணமளிக்கப்படும், இரகசியங்கள் வெளியிடப்பட மாட்டா. விபரங்களுக்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை கவருடன் தொடர்பு கொள்க முகவரி: பீ. எம். திசாநாயக்கா, அரசாங்க பதிவு பெற்ற குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர் (நான்கு தேவாலய பிரதம தர்மகர்த்தா) 55, மிகுந்து மாவத்தை, கொழும்பு – 12. தொலைபேசி-33955.

வி. இ: 009949

### விளம்பரமின்றி வியாபாரமில்லை

# மட்டக்களப்பில் குடியேற அகதிகள் முடிவு

வவுனதீவு, செப். 10
அண்மையில் ஏற்பட்ட வன்செயல்களை அடுத்து வெளியேறி மட்டக்களப்புக்கு வருகை தந்துள்ள அகதிகளில் ஒரு சாரார், மட்டக்களப்பில் நிரந்தரமாகக் குடியேற முடிவு செய்துள்ளனர்.

வாடகைக்கு வீடுகள் பெறுவதிலும், வீடு – வளவு கொள்வனவு செய்வதிலும் அவர்கள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதனால் இப்பகுதியில் வாடகை வீடுகளுக்கும், காணிக்கும் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

உறவினர் – நண்பர் வீடுகளில் தங்கியிருந்தவர்கள், தற்போது அங்கிருந்து வெளியேறி வாடகை வீடுகளில் வசிக்க ஆரம்பித்துள்ளனர். (க-318)

## மீண்டும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
செயற்பட்டு வருகிறது.

ஏனைய தபால் அலுவலகங்கள் தொடர்ந்து மூடப்பட்டிருப்பதால் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர் என சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

முக்கியமாக பென்ஷன் பெறுவோர் நன்கொடைப் பணம் பெறுவோர் ஆகியோரே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய், கரவெட்டி தபால் நிலையங்களும் —

ஆவரங்கால், புத்தூர், வாழ் கோட்டடி, கிராம்பத்தை, சித்தன்கேணி, பண்ணாகம், திருநெல்வேலி, அளவெட்டி, அல்வாய், அச்செழு, கட்டுடை, மருதடி உப தபால் நிலையங்களுமே இன்னும் திறக்கப்படாத தபால் நிலையங்களாகும். (த-142)

## நீதியரசர்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சத்தியப்பிரமாணம் எடுக்க வேண்டும்.

இந்தச் செய்தி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையே நீதியரசர்களின் கவனத்துக்கு வந்தது.

இது தெரிய வந்ததும் பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோன் வெள்ளியன்று காலை நீதியரசர்களின் உடனடி கூட்டம் ஒன்றுக்கு அழைத்தார்.

அப்போது உயர்நீதிமன்ற, அப்பீல் நீதிமன்ற நீதியரசர்கள் நீதிமன்ற விசாரணைகளை நடத்திக் கொண்டிருந்தனர். அவர்கள் நீதிமன்ற அமர்வுகளை இடையில் ஒத்திப்போட்டு விட்டு பிரதம நீதியரசரைச் சந்தித்தனர்.

அதன் பின், நீதியரசர்கள் ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்குச் நேரம் ஒதுக்குமாறு ஜனாதிபதி அலுவலகத்தைக் கேட்டிருக்கின்றனர்.

நீதியரசர்களும் சத்தியப்பிரமாணம் எடுக்க வேண்டிய கால எல்லை கடந்து விட்டது என்று அரசாங்க சட்ட வல்லுனர்கள் சுட்டிக்காட்டி இருப்பதாக ஜனாதிபதியின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த—ப)

## சினிமா

| | |
|---|---|
| **செல்லமஹால்** 2.00, 6.00 | **மூடுபனி** (கலர்) |
| **சாந்தா** 2.30, 6.00 | கமலஹாசன் ஸ்ரீதேவி நடித்த **வாழ்வே மாயம்** (கலர்) |
| **லிங்ஸி** 2.00, 6.00 | |
| **ஹரன்** (யாழ்நகர்) 10.30, 2.00 | சிவாஜிகணேசன் சரிதா நடித்த **துணை** (கலர்) |
| **ஜெஸிமா** 2.00, 6.00 | |
| **ராணி** (யாழ்நகர்) 10.30, 2.00 | |
| **சரஸ்வதி** (திருமலை) 2.00, 6.00 | கமலஹாசன் அம்பிகா நடித்த **சகலகலா வல்லவன்** (கலர்) |

## இடம் பெயர்ந்த ஊழியர்களுக்கான சமூக பாதுகாப்புத் திட்டம்

1. 1983 ஜூலை மாதக் கடைசியில் இடம்பெற்ற கலவரங்களின் போது தொழிற்சாலைகளும், வேலைத்தளங்களும் நாசமாக்கப்பட்டதால், வேலைகளை இழந்த சகல நிரந்தர ஊழியர்களுக்கும் உதவ, சமூக பாதுகாப்புத் திட்டம் ஒன்றை அரசாங்கம் வகுத்துள்ளது.
2. வேலை வழங்குநர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வேலை இழந்தோரின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது பூரணமாக இருக்குமென்று நினைக்க முடியாது. ஆனபடியால், தொழிற்சாலைகள், வேலைத்தளங்கள் சேதமாக்கப்பட்டதால் வேலை இழந்திருக்கும் நிரந்தர ஊழியர்கள், கீழ்க்கண்ட படிவத்துக்கு அமைய தமது விபரங்களைத் தருமாறு கேட்கப்படுகின்றனர்.

### மாதிரிப் படிவம்

முழுப் பெயர்:
வயது:
தொழிற்சாலை/வேலைத்தள முகவரி:
தொழிலின் தரம் —
தொழிலாளி / போர்மன் / ஒப்பரேட்டர் போன்ற:
ஊழியரின் சேமலாப நிதி இல:
1983 ஜூலையில் பெற்ற சம்பளம்:
விண்ணப்பதாரரின் தற்போதைய முகவரி:
தேசிய அடையாள கார்ட் இல:

............................
கையொப்பம்

திகதி ............................

3. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள், தபால் மூலம், "அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம், தபால் பெட்டி இல. 2210, கொழும்பு-1" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

அத்தியாவசிய சேவைகள்
ஆணையாளர் நாயகம்

8 செப்டம்பர் 1983.

# கப்பல்களை-விமானங்களை கபளீகரம் செய்யும் பெர்முடா முக்கோணம்

## அங்கு நடப்பது என்ன?

## விஞ்ஞானிகளால் கூட அறிய முடியவில்லை

"ஏர்போர்ட்-77" எனும் ஆங்கிலத் திரைப் படத்தைப் பார்த்தவர்கள், விமானம் கடலில் விழுந்து மிதந்து, பின்னர் மூழ்கிவிடுவதைப் பார்த்திருப்பார்கள்.

இக்காட்சி "பெர்முடா" முக்கோணத்தில் நடைபெறுவதாக அமைகிறது.

பொதுவாக பெர்முடா முக்கோணம் என்றதுமே, பேய், பில்லி, சூன்யம் ஆகியவற்றின் நினைவுகளே தோன்றுகின்றன.

இந்த பெர்முடா முக்கோணத்தில் எத்தனையோ கப்பல்கள் மூழ்கிவிட்டன. எத்தனையோ விமானங்கள் விழுந்து விட்டன.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலக் கடல் பகுதியில் தொடங்கி, பகமாஸ் தீவுகளை உள்ளடக்கி, பெர்முடா தீவோடு படர்ந்திருக்கும் கடல் பகுதியையே பெர்முடா முக்கோணம் என்று சொல்கிறார்கள்.

1945 ஆம் ஆண்டிலிருந்து இது வரையில் 40 கப்பல்கள் அந்த பெர்முடா முக்கோணத்தில் மூழ்கிவிட்டன. 20 விமானங்கள் விழுந்து காணாமல் போய்விட்டன.

கப்பல்கள் மூழ்கிப் போனதற்கான அறிகுறிகளோ, விமானங்கள் விழுந்து மூழ்கியதற்கான அறிகுறிகளோ காணப்படவில்லை.

அத்தனை கப்பல்களும், அத்தனை விமானங்களும், மறைந்து விட்டன. அவற்றிலிருந்த ஆயிரமாயிரம் பேரும் கடலோடு கடலாக ஐக்கியமாகி மர்மமாகி விட்டனர்.

★

நாள்:- 5-12-1945
நேரம்: பிற்பகல் 2.10

ஐந்து போர் விமானங்கள் பெர்முடா கடல் பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது திடீரென காணாமல் போய்விட்டன. இந்த நிகழ்ச்சி அமெரிக்காவை மட்டும் அல்ல முழு உலகத்தையே ஓர் உலுக்கு உலுக்கியது.

ஒரே சமயத்தில், ஐந்து விமானங்கள் மர்மமாகக் காணாமல் போவது என்பது சாதாரண விஷயமா என்ன?

அந்த விமானங்களின் விமானிகள், கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அவசரச் செய்திகளை அனுப்பிய போது, தத்தம் விமானங்களில் உள்ள திசையறி கருவிகளும், ராடார் கருவிகளும், மற்ற எல்லாக் கருவிகளும் ஒரே சமயத்தில் [illegible]கவில்லை என்று தெரிவித்தனர்.

அதன் பிறகு எந்த ஒரு செய்தியும் அவ் விமானிகளிடமிருந்து கிடைக்கவில்லை. உடனடியாக, அந்த விமானிகளைத் தேடும் பணி தொடங்கியது. நூறு விமானங்கள் தேடின.

ஏறக்குறைய 160,000 சதுர கிலோ மீட்டர்கள், கடல் பகுதியில் தேடியும் எந்தவொரு விமானத்தையோ, விமானத்தின் பாகங்களையோ, மனித உயிர்களையோ கண்டுபிடிக்க முடியவில்லை.

லத்தீன் அமெரிக்காவில் கோடி கோடியாக தங்கத்தையும் வெள்ளியையும் சூறையாடிய ஸ்பெயின்காரர்கள் கப்பல் கப்பலாக தங்கள் நாட்டிற்கு தங்கத்தை அள்ளிவரும் போது எத்தனையோ கப்பல்கள் இங்கு மூழ்கிவிட்டனவாம்.


மூழ்கிய கப்பல்களைத் தேடிப் போன கப்பல்களும் காணாமல் போய்விட்டன.

இந்த நிகழ்ச்சி நடைபெற்று மூன்றூறு ஆண்டுகள் ஆன பிறகு, தங்கக் கப்பல்களைத் தேடிப் பிடித்து, அவற்றிலுள்ள தங்கப் பாளங்களை மீட்டு பணக்காரர்களாகி விடலாம் என்று படையெடுத்துச் சென்ற இருபதாம் நூற்றாண்டு அரும்பொருள் ஆராய்ச்சியாளர்களும் காணாமல் போய்விட்டனர். அவர்கள் பயணம் செய்த கப்பல்களும் மாயமாய் மறைந்தன.

இதை எல்லாம் வைத்துப் பார்க்கும் போது, இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உண்டு என்பதை மறுக்கும் முற்போக்குவாதிகள் கூட ஒரு கணம் மலைத்தே போவார்கள்.

ஸ்பானியக் கடலோடி ஜூரிவான் பெர்முடஸ் என்பவரால் பெர்முடா தீவுகள் 16ஆவது நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டன. அவருடைய பெயராலேயே இன்றும் அத்தீவுகள் அழைக்கப்படுகின்றன.

இதில் ஓர் அதிர்ச்சியான செய்தி என்னவென்றால், இத்தீவுகளைக் கண்டுபிடித்த பெர்முடாஸின் கப்பல் திரும்பி வரவில்லை. ஒரு கற்பாறையில் மோதி உடைந்து விட்டது.




அத்தீவுகளில் யாரும் குடியேறவில்லை. ஆனால், 1609 ஆம் ஆண்டு சேர் ஜோர்ஜ் சோமர்ஸ் என்பவர் அங்கு சென்றார். அவருடைய கப்பலும் உடைந்து நொறுங்கி விட்டது.

காணாமல் போன கப்பல்களும், விழுந்து நொறுங்கிய விமானங்களும், பெரும்பாலும் ஜனவரி, டிசம்பர் மாதங்களிலேயே மாயமாகிவிட்டன. டிசம்பர் 5 திகதியில் மட்டும், வெவ்வேறு ஆண்டுகளில் மூன்று துயர் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

1872 டிசம்பர் 5ல் மேரி செலஸ்டி எனும் கப்பலிலிருந்த கப்பல் தலைவரும் சிப்பந்திகள் எல்லாரும் கப்பலிலிருந்து மறைந்து விட்டனர். ஆளில்லாக் கப்பல் மட்டும் கடலில் மிதந்து கொண்டிருந்தது.

1945 டிசம்பர் 5ல் ஐந்து விமானங்கள் ஒரே சமயத்தில் காணாமல் போய்விட்டன.

1946 டிசம்பர் 5ல் "சிட்டி பெலி" எனும் கப்பலில் இருந்த சிப்பந்திகள் அனைவரும் ஒரே நேரத்தில் திடீரென்று மறைந்து விட்டனர்.

1918 மார்ச் திங்கள் 293 பேரை ஏற்றிச் சென்ற "சைக்ளொப்ஸ்" எனும் 19,000 தொன் எடையுள்ள அமெரிக்க போர்க் கப்பல் காணாமல் போய்விட்டது.

ஆர்வே கோனேவர் எனும் கோடீஸ்வரர் பயணம் செய்த "ரெவோனெக்" எனும் கப்பல் 1958 ஜனவரியில் இதே பெர்முடா முக்கோணத்தில் மறைந்துவிட்டது.

மியாமி கடற்கரையோரத்தில் துரிதப் படகில் பயணம் செய்த இருவர், தம் படகு பழுதடைந்து விட்டதாகவும், உதவி தேவை என்றும் கம்பியில்லாத் தந்தி மூலமாக செய்தி அனுப்பினர்.

பத்து நிமிடங்களில் சொல்லப்பட்ட இடத்திற்கு விரைந்த காவல் துறையினர் படகைக் காணாமல் அதிர்ச்சியடைந்தனர். இது 1967 டிசம்பர் 22ல் நடந்தது.

1947ல் அமெரிக்கப் போர்க் கப்பலான "சுப்பர் போர்ட்ரஸ்" ஏதோ ஓர் ஆற்றலால் கடலுக்குள் இழுக்கப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன.

1948 ஜனவரி 30ல் ஸ்டார் டைகர் எனும் ஆங்கிலேய விமானம் 31 பயணிகளோடு இதே இடத்தில் மறைந்து போயிற்று.

1949 ஜனவரியில், ஸ்டார் ஏரியல் எனும் மற்றோர் ஆங்கிலேய விமானமும் இதே முக்கோணத்தில் மாயமாகி விட்டது.

1948 டிசம்பரில், சான் ஜுவான் என்னும் நகரிலிருந்து அமெரிக்காவில் உள்ள மியாமிக்கு டி. சி. 3 ரக விமானம் ஒன்று பறந்து கொண்டிருந்தது. விமானத்தில் உள்ள பயணிகள் கிறிஸ்மஸ் பாட்டுப் பாடுவதாகவும், இன்னும் ஒரு சில நிமிடங்களில் விமானம் விமான நிலையத்தில் வந்து தரை இறங்கிவிடும் என்று விமானி, கட்டுப்பாட்டு நிலையத்திற்குத் தெரியப்படுத்தினார்.

ஆனால் விமானம் இறங்கவில்லை அதற்கு என்ன நடந்தது என்றும் யாருக்கும் தெரியவில்லை.

இத்தனை கப்பல்களும் இத்தனை விமானங்களும் மறைந்து மாயமாய்ப் போன கதைகள் ஒருபுறமிருக்க, புளோரிடா நீரிணையில் இப்போது கூட எத்தனையோ கப்பல்கள் போய்க் கொண்டும் வந்துகொண்டும் தானிருக்கின்றன.

இக்கடல் பகுதியில் எப்போதுமே பனிப்படலம் படர்ந்திருக்கிறது. சிறு படகுகளையும் மீன்பிடிக் கப்பல்களையும் பெருங் கப்பல்கள் இடித்து மோதி மூழ்கடித்துவிடும் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டுதானிருக்கின்றன.

அங்கு நடக்கும் மர்ம இழப்புகள் குறித்து விஞ்ஞானிகளும், மந்திரவாதிகளும் வெவ்வேறான காரணங்களைக் கூறுகிறார்கள்.

ஆனால் எந்தக் காரணமும் திட்டவட்டமான காரணமாகத் தெரியவில்லை. விஞ்ஞானிகள் இந்த மர்மத்தை எப்போது துலக்கப் போகிறார்களோ? (ர)

# காலத்தைக் கடந்து வாழும் கவிஞன் பாரதி

## நாளை அவரது நினைவு நாள்

தெம்மாங்குக் கவிஞர் என்று சம காலத் தமிழ் பண்டிதர்களால் வர்ணிக்கப்பட்டு "கஞ்சாக் கவிஞர்", "குடுகுடுப்பைக் கவிஞர்" என்று தமிழ் நாட்டு மக்களால் ஏளனம் செய்யப்பட்ட ஒருவரின் அறுபத்தி இரண்டாவது சிரார்த்த தினம் நாளை திங்கட்கிழமை வருகிறது.

யார் அந்தக் கவிஞர்?

"பாட்டுக்கொரு புலவன்" என்று பிற்காலக் கவிஞன் ஒருவன் ஏற்றிப் போற்றிய சுப்பிரமணிய பாரதியார் தான் அந்தக் கவிஞர்.

இன்று உலகக் கவிஞனாகப் போற்றப்படும் பாரதியார் 62 ஆண்டுகளுக்கு முன் அதாவது 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 12ஆம் திகதி அன்று 39 வயது கூட நிறைவேறாமல் இறந்த போது அன்றைய தமிழ் நாட்டு மக்கள் அவருடைய சிறப்பை உணர்ந்திருக்கவில்லை.

சென்னை, திருநெல்வேலியில் அவருடைய இறுதி ஊர்வலம் நடைபெற்ற போது அதில் மொத்தம் இருபத்தி மூன்று பேர் தான் கலந்து கொண்டார்கள்.

மேதைகளுக்கு அவர்கள் வாழும் காலத்தில் உரிய மதிப்புக் கிடைப்பது அபூர்வம். அதற்காக அவர்கள் தாம் வாழ்ந்து இறந்தவுடன் அழிந்து போகின்றவர்களும் அல்லர்.

பாரதியார் அதற்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார்.

எட்டயபுரத்தில் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் திகதி ஸ்ரீமதி லட்சுமி அம்மாளுக்கும், ஸ்ரீ சின்னச்சாமி ஐயருக்கும் அன்பு மகனாக அவதரித்தார் பாரதியார்.

பிறந்த பிள்ளைக்கு சுப்ரமணியம் என்றே பெயர் சூட்டினார் பெற்றோர், ஆனால் "சுப்பையா"



என்ற புனைப் பெயராலேயே அனைவராலும் அவர் அழைக்கப்பட்டார்.

எட்டயபுரத்தில் தமிழ் மொழியை கற்ற அவர் திருநெல்வேலியில் ஆங்கிலம் கற்றார். தந்தையிடம் சமஸ்கிருதமும் கொஞ்சம் கற்றுக் கொண்டார்.

தந்தை இறந்த பின்னர் காசிக்குச் சென்று அத்தை குப்பம்மாளுடன் வாழ்ந்தார். அச்சமயம் அலகாபாத் பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சைக்காக உயர் கல்லூரி ஒன்றில் சேர்ந்து ஆங்கிலமும், சமஸ்கிருதமும் தொடர்ந்து படித்தார். அங்கு இந்தி பேசும் நண்பர்கள் மூலம் இந்தி மொழியிலும் அவருக்கு நல்ல தேர்ச்சி ஏற்பட்டது. இதனால் இந்திப் பாடத்தையும் விரும்பிப் படித்து அதிலும் தேர்ச்சி பெற்றார்.

இவ்வாறு பாரதியார், தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி, சௌராஷ்டிரம், தெலுங்கு, மலையாளம், பிரெஞ்சு ஆகிய எட்டு மொழிகளும் அறிந்த வித்தகராக விளங்கினார்.

இத்தனை மொழிகளிலும் அவருக்குப் பிடித்த மொழி தமிழ் தான்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று அவர் பாடியது தமிழ் மீது அவர் கொண்ட பேரன்பைக் காட்டுகிறது.

தமிழ் மொழியையும் தமிழ் நாட்டையும் ஏற்றிப் பாடிய பாரதியார், சிறுவர்களுக்காகவும், பெண்களுக்காகவும் பல பாடல்களைப் பாடினார். சிறுவர்களுக்காக அவர் அன்று பாடிய பாடல்கள் இன்றும் இனிமையாகவே இருக்கின்றன.

இத்தகைய சிறப்புமிக்க கவிஞரை அன்றைய உலகம் அங்கீகரிக்கவில்லை. அவர் தமது தேசியப் பாடல்களை அச்சிட்டு விநியோகித்த போதுதான் இலக்கண வித்வான்களும், தனித் தமிழ்ப் பண்டிதர்களும் அவரைத் "தெம்மாங்கு கவிஞர்" என்று ஒதுக்கினர்.

பிரிட்டிஷ் ஆட்சியின் கெடுபிடிக்குப் பயந்து புதுச்சேரியில் ஒளிந்து மறைந்த பாரதியாரை தமிழ்நாட்டு மக்கள் "கஞ்சாக் கவிஞர்" என்றும், "குடுகுடுப்பைக் கவிஞர்" என்றும் ஏளனம் செய்தனர்.

அப்படியெல்லாம் ஏளனத்துக்கும், தூற்றலுக்கும் இலக்கான பாரதியாரின் புகழ் இன்று எட்டுத் திக்கும் பரவியிருக்கிறதென்றால் அது அவருடைய மேதாவிலாசத்தாலும், தெய்வத் திருச் செயலாலுமே அன்றி வேறில்லை. (ர-11)

**விற்பனைக்கு**

சிங்கர் டீ பிரிவ்லைர் மொடல் இல. எஸ். எல். எல் – 210 மூன்று மாதம் மட்டும் பாவனை செய்யப்பட்டது. நியாய விலைக்கு விற்பனைக்குண்டு.

ஹமீதியா டீ ரூம்
சாய்ந்தமருது—3.

SWISS ROSES·ORCHIDS · SHEETS · BED SPREADS · TOWELS · PILLOW CASES

**LEVI'S**
**GENUINE–IMPORTED**

டெனிம் கோட்டுரெய் ஜீன்ஸ், அமெரிக்கா லீவிஸ் ஸ்றவுஸ் கென், பிரான்சிஸ்கோவில் இருந்து ஆடவர், மகளிருக்கான உன்னத நவ மோஸ்தர்கள் 490/- ரூபாவில் இருந்து, ஜீன்ஸ்களுக்கு பொருத்தமாக அணியக்கூடிய சேட் வகைகள் ஒன்று 150/-

Ideal for Travelling—Sports—Getabouts.

NO PARKING PROBLEM

S-H-O-B-H-A-S
463. GALLE ROAD-COLOMBO-3
DIAL-81888

ALSO MOSQUITO NETS

**உங்கள் குழந்தையின் வளமான வருங்காலம் உங்கள் கைகளில்!**



இது உங்கள் குழந்தையாக இருக்கலாம். உலகமறியாத இக் குழந்தையின் வளமான வருங்காலம் உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது.
வளமான வாழ்க்கைக்குப் பணம் அவசியம். 'இல்லை' என்ற சொல்லுக்கு இடமிருத்தலாகாது. உங்கள் பிள்ளைக்கு இந்தப் பாக்கியம் கிடைப்பதை நீங்கள் மறுப்பீர்களா? பணவசதிக் குறைவால் அவன் உயர் கல்வி பெறமுடியாமல் படிப்பை இடையில் கைவிடுவது உங்களுக்கு விருப்பமா?
அவனது வருங்காலத்தைத் திட்டமிடுங்கள். இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு வந்து எம்முடன் பேசுங்கள். எமது மூன்று கட்ட ஆயுள் காப்புறுதித் திட்டம் உங்கள் தேவைக்கும் வசதிக்கும் பொருத்தமானது. உங்களது செலவுகளையும் உங்கள் பிள்ளைகளின் கல்வி, விவாக செலவுகளையும் ஈடுசெய்யத் தக்க விதத்தில் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.
உங்கள் பிள்ளைகளின் வருங்காலம் பற்றிய கனவுகளும் எண்ணங்களும் நிறைவேற வேண்டுமானால்.........இன்றே செயலில் இறங்குங்கள். இந்தக் கூப்பனை நிரப்பி எமது பிரசார முகாமையாளருக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் காப்புறுதித் திட்டங்கள் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன். எனக்கு அண்மையிலுள்ள அமைப்பாளர் மூலம் அறியத்தரவும்.
பெயர் ________
முகவரி ________



நாமே முன்னோடிகள் - நம்மையே நாடுங்கள்

**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**
'காப்புறுதி இல்லம்' 21, வொக்சோல் வீதி, கொழும்பு 2.

பலரசத் திரட்டு

# கட்டழகு காளையர் ஆடும் கண்கவர் "காபரே" நடனம்

காபரே நடனம் என்றால் அதைப் பெண்கள் மாத்திரமே ஆடுவோர்கள் என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது தவறு.

ஆண்களும் காபரே நடனம் ஆடுகிறார்கள். ஆடிக் கொண்டே அவர்கள் தங்கள் உடைகள் ஒவ்வொன்றாகக் கழற்றி எறிந்து கவர்ச்சியைக் காட்டுகிறார்கள்.

லண்டனில் உள்ள பல அரங்குகளில் ஆண்கள் ஆடும் "காபரே" நடனம் இடம்பெறுகிறது.

ஆண்கள் ஆடும் "காபரே" நடனத்தை யார் ரசிப்பார்கள்? அரங்குகளில் கூட்டமே இருக்காது என்று அவசரப்பட்டு முடிவுகட்டி விடாதீர்கள்.

இந்த நடனத்தைப் பார்த்து ரசிக்க ஏராளமானவர்கள் போகிறார்கள். அரங்குகளில் எள் விழாத அளவு கூட்டம் கூடுகிறது.

ஆட்டத்தை ரசிக்கப் போகின்றவர்கள் பெரும் பாலும் பெண்களே ஆவர்.

இந்த நடனத்தில் பங்கு கொள்ளும் இளைஞர்கள் நல்ல உடற்கட்டும், ஆண்மையான முகவெட்டும் உடையவர்கள்.

இந்த நிகழ்ச்சியின் போது அவ்வளவு உடைகளையும் களைந்த பின்னர் கூட தாங்கள் உணர்ச்சி வசப்படுவதில்லை என்று "ஆடல் அழகர்கள்" சொல்கிறார்கள். நம்புவீர்களா?

இந்த ஆட்டம் இரவு நேரத்தில் தான் நடக்கிறது. அதற்கு வேடிக்கையான பெயர் வைத்திருக்கிறார்கள். "கோழி இரவு" என்பது தான் பெயர்.

அந்த நடனக்காட்சிகளைக் கண்டு களிக்க வருவோர் பெரும் பாலும் பெண்கள் என்பதால் தான் இந்தப் பெயர் வந்தது.

இந்த ஆட்டத்தை ரசிக்க ஆண்களும் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் ஒரு நிபந்தனை. அவர்கள் தங்களுடன் ஒரு பெண்ணையாவது கூட்டிவர வேண்டும்.

ஆட்டக்காரர்கள் பல தேர்வுகளுக்குப் பின் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். வாரத்துக்கு 8000 ரூபா சம்பளம்.

நடனக் குழுவில் பீ. ஏ. பட்டதாரிகளும் இருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

வேலை இல்லாப் பிரச்சினையால்தான் தாம் இந்தத் தொழிலைத் தேர்ந்து எடுத்ததாக நடனக் குழுவில் உள்ள பலரும் கூறுகிறார்கள். (ர-10)

## தவறுதலாக ரயிலில் ஏறிய வாலிபரை தள்ளி விழ்த்தி கொன்றனர் வனிதையர்

ஓடிக்கொண்டிருந்த ஒரு ரயிலில் அவசரமாக ஏறினன் ஒரு வாலிபன். ரயில் பெட்டியில் இருந்தவர்கள் அவரை ரயிலுக்குள் அனுமதிக்காமல் வெளியே தள்ளி விட்டனர்.

ரயிலின் சக்கரங்களுக்கு இடையில் வாலிபன் விழுந்தான். உடல் சிதைந்து அவன் அந்த இடத்திலேயே இறந்தான்.

கல்கத்தாவில் நைஹாதி என்னும் இடத்துக்கு அருகில் இது நடந்தது.

ரயில் ஓடிக்கொண்டிருந்த போது மேற்படி வாலிபன் அவசரத்தில் பெண்கள் பெட்டி ஒன்றுக்குள் ஏறிக் கொண்டான்.

விஷயத்தை அறிந்து கொண்டவுடன் தான் அடுத்த ரயில் நிலையத்தில் இறங்கி வேறு பெட்டிக்குப் போய் விடுவதாக அவன் சொன்னான்.

எவ்வளவு மன்றாடியும் கேட்காமல் பெண்கள் அவனை பெட்டியிலிருந்து வெளியே தள்ளி விட்டனர்.

இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

பெண்ணைக் கண்டால் பேயும் இரங்கும் என்று சொல்பவர்கள் இதைக் கண்டு என்ன சொல்வார்களோ? (ர-11)



ஒருவர்:— நாம் முழுக்க கரையாங்குச் சட்டம் போட்டு அல்லிக்கு என்ன செய்திங்க...?

மற்றவர்:— அக்கம் பக்கத்திலிருந்து வாறவங்கட தொல்லையில்லாம நிம்மதியாக மனைவியோட ரீ. வி. பார்த்துக் கிட்டிருந்தேன்......

## டி. வி. போன்



டெலிபோனில் பேசும் போதே நம்மிடம் பேசுபவரையும் நாம் பார்க்கக்கூடிய "டி. வி. போன்" சாதனத்தை ஜப்பானிய நிறுவனம் ஒன்று கண்டுபிடித்துள்ளது. பெண்மணி ஒருவர் தொலை தூரத்திலுள்ள இரண்டு பெண்களுடன் உரையாடும்போது அவர்களின் தோற்றத்தை டி. வி. திரையில் பார்க்கின்றார். (ர)

## தாய் இறந்து 84 நாட்களில் உயிருடன் பிறந்த குழந்தை

கர்ப்பிணித் தாய் ஒருவர் இறந்தார். அவர் இறந்து 84 நாட்களுக்குப் பின் அவருடைய குழந்தையை உயிரோடு வெளியே எடுத்தார்கள் டாக்டர்கள்.

கலிபோர்னியாவில் இது நடந்தது.

கர்ப்பிணித் தாய் இறந்த பின்பு "ஒக்சிஜன்" செலுத்தி அவரை உயிரோடு இருக்கச் செய்தார்கள். 84 நாட்களுக்குப் பின் "சிசேரியன்" ஆப்பரேஷன் மூலம் குழந்தையை டாக்டர்கள் வெளியே எடுத்தார்கள்.

குழந்தையின் எடை 1.7 கிலோ. (ர-21)

## வயதில்சிறிய பெற்றோர்

ஆரோக்கியமான உடல் வலுவுடைய குழந்தையைப் பெற்றெடுத்த வயதில் குறைந்த பெற்றோர்கள் யார் தெரியுமா?

சீனாவின் ஹிஸி குடும்பத்தைச் சேர்ந்த அமோய், பக்கின் ஆகியோரே அந்தப் பெற்றோர்கள் ஆவர்.

1910 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி குழந்தை ஒன்றை இந்தத் தம்பதியர் பெற்றெடுத்த போது கணவனுக்கு வயது ஒன்பது. மனைவிக்கு எட்டு மட்டுமே.

விந்தையாக இருக்கின்றதா? (ர-6)

## கண்ணாடித் தூண்



கட்டடங்களுக்குத் தூண்களாகவும், கூரைக்கு விட்டங்களாகவும் பயன்படுத்த இனி மரத்துண்டுகளைத் தேட வேண்டியதில்லை.

டென்மார்க் கட்டடக் கட்டுமானப் பொருள் தயாரிப்பாளர்கள் நார் கண்ணாடிகளை இணைத்த துப்பர்போஸ் என்னும் தூண்களை இப்பொழுது கண்டுபிடித்துள்ளனர்.

நார் கண்ணாடிகளை இணைத்து அவற்றுக்கு நீரால் பாதிக்கப்படாத ஒட்டுப் பலகைகள் கவசமாக்கப்பட்டுள்ளன.

இதனைத் தரையிலும் பதிக்கலாம், கூரைக்கும் பயன்படுத்தலாம். மரவேலைகளில் தச்சர்கள் கையாளும் சாதனங்களைக் கொண்டே இந்த நார் கண்ணாடித் தூண்களைப் பயன்படுத்தலாம். வெப்பமும் இதனை அதிகம் பாதிக்காது.

இங்கு துப்பர் போஸ் என்னும் தூண் ஒன்றை ஒருவர் பொருத்துவதைப் படத்தில் காணலாம். (ர)

## நாடகங்களுக்கு நல்ல வரவேற்பு

ஜெர்மனியில் நாடக ரசிகர்களின் எண்ணிக்கை தற்சமயம் அதிகரித்து வருகின்றது.

இங்கு 392 நாடக அரங்குகள் இருக்கின்றன. இருபதாயிரம் ஆசனங்கள்.

நாடகங்கள் நடக்கும் போது இந்த ஆசனங்களுக்கான டிக்கெட்டுகள் அனைத்தும் பெரும்பாலும் விற்பனையாகி விடுகின்றன. (ர-11)

## புற்றுநோய்க் கிருமியை கட்டுப்படுத்தும் கருவி



நான்கு அங்குலம் குறுக்களவுள்ள இந்த வெள்ளி நிற "பம்"பை நுரையீரல் புற்று நோயாளியின் நெஞ்சுக்குள் பதித்து விட்டால் அவருடைய வாழ் நாள் இரு மடங்காக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த "பம்பு"க்குள் இருக்கும் சக்தி வாய்ந்த மருந்து புற்றுநோய் கட்டிக்குள் நேரடியாகச் சென்று அதன் வளர்ச்சியை கட்டுப்படுத்துவதாக இதைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## மணிக் கவிதை

### காலைப் பொழுது

இருள் அரசனின்
இருண்ட ஆட்சியை
எதிர்த்து
வானில் ஒரு
புரட்சி யுத்தம்!
காகச் சேனைகள்
வீர கர்ச்சனை செய்து
வெற்றி முழக்கமிட
பறவைக் கூட்டங்கள்
பண்ணிசைத்து வாழ்த்த
சூரிய அரசன்
வெளிச்ச(க்)குதிரையேறி
கம்பீரமாய் பவனி வர
வெருண்ட இருளரசன்
பின்வாங்கி ஒளியவே
"வெளிச்ச ஆட்சி"
நடைமுறைக்கு வருகிறது.

★ டி. எம். சுபைர் கான்.

### கோழி கூவுது

அதிகாலை நேரம்
ஆற்றங் கரையோரம்
பொழுது விடிந்ததை
அறிவிக்க
கோழி கூவுது! — என்
வாழ்வுக் கரையோரம்
மரணம் இன்றோ...?
என்றோ என்று
முதுமைக்
கோழி கூவுது!

★ ஏ. ஏ. அமீர் அலி

### முடிந்து விட்டேன்

உறவு நெரிசலில்
வியர்த்து களைத்து
உறங்கிப் போனேன்
"உடன் வரவும்".
இறைவனின் தந்தி
இன்று கிடைத்தது
நித்திரைப் பயணத்தின்
முற்றுப் புள்ளியை
நிரந்தரமாக்குகிறேன்
வாழ்வுப் பாலை
என்னால் கண்ட
காதல் தோல்வியால்
கண்ணீர் வடிக்கிறேன்
ஆம்
நான் மரணப் பெண்ணை
மணமுடித்து விட்டேன்
முடிந்து விட்டேன்.

★ க. சி. செல்லத்துரை

### கடைசிக் கண்ணீரின் இறுதி வடிப்புகள்!

என்
மனத் தேசத்தை விட்டும்
தூரமாகிப் போனவனே
உன்னிடம்
கண்ணீர்த் துளிகள்
ஏதேனும் மிச்சமிருப்பின்
அவற்றை வைத்துக் கொள்
இப்போதே
வடித்து முடித்து விடாதே
என்
மனத் தேசத்தை விட்டும்
ஒரு அந்நிய
மனத் தேசத்துக்கு
பலவந்தமாய்
குடியேற்றப்பட்டவனே
அங்கு உனக்கு
நடக்கின்ற கொடுமைகளை
இரகசியமாய் எனக்கு
இனியும் எழுதாதே
இறந்தவர்கள் வாசிப்பதில்லை
இறக்கப் போகிறவர்களும்தான்
விரைவில்
என் மரண ஊர்வலம்
உன்
வீதி வழியே வரும்போது
உன் கண்கள்
அதைக் கண்டு
சில துளிக் கண்ணீரையாவது
வடிக்க வேண்டுமென்றே
விரும்புகிறேன்.
ஆதலால்,
உன்னிடம்
கண்ணீர் துளிகள்
ஏதேனும் மிச்சமிருப்பின்
அவற்றை வைத்துக் கொள்
இப்போதே
வடித்து முடித்து விடாதே!

★ ஆர். எம். நௌஷாத்

## டுரியானுக்குள் டுரியான்



உங்களில் பலர் டுரியானைக் கண்டிருப்பீர்கள். ஆனால் டுரியானுக்குள் டுரியானைக் கண்டிருக்கிறீர்களா? மலேசியாவில் கோத்தா திங்கி என்னும் இடத்தைச் சேர்ந்த இஞ்சே முகம்மது நூர்மின் இஸ்மாயில் (60 வயது) என்பவரின் தோட்டத்தில் இந்த அதிசய டுரியான் வளர்ந்தது. அதனை உடைத்துப் பார்த்த போது உள்ளே குட்டி டுரியான் ஒன்று இருந்தது (ர)



ஒருவர்:— ஊரடங்குச் சட்ட நேரத்தில் உங்க பகுதியில அரிசி, சீனி, மாவு எல்லாம் தட்டுப்பாடு இல்லாமக் கிடைச்சுதா?

மற்றவர்:— அதெல்லாம் தாராளமாகக் கிடைச்சது. ஆனால் குடும்பக் கட்டுப்பாட்டுக் குளிசைக்குத்தான் தட்டுப்பாடாப் போச்சுது...




"மந்திரயோகி" வசிய, மாந்திரீக, வைத்தியம்

அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம் C433

அன்பர்களே! சூனியம், வசியமருந்திடு, பேய் பிசாசுக் கோளாறுகள், கண்ணூறு, நாவூறு, ஆண் பெண் இரகசிய பாலியல் நோய்கள், தடைப்பட்ட மாதவிடாய்க் கோளாறுகள், தீராத நோய்கள், பிரச்சினைகளை அனுமான் அஞ்சன மை வெளிச்ச மூலமாகவும், மாந்திரீகக் குறி மூலமாகவும் அறிந்து, மருந்து, அக்குப்பங்சர் ஹிப்நாட்டிச, மஹேவசிய, யோக சிகிச்சை மூலமாகவும், தெய்வத் துணை கொண்டு மாந்திரீக சக்தியினாலும் தீர்த்துக்கொள்ள, குடியை மறக்க எதிரியை அடக்க, விரும்பியவர்களை வசியமாக்க, பரீட்சையில் சித்தியடைய, நேர்முகப் பரீட்சையில் எடுபட, தொழில் கிடைக்க, வியாபார விருத்தி அடைய, களவு அதிர்ஷ்டம் கிடைக்க, வழக்கு வெல்ல, வீடு, வளவு, உடமைக் காவல்பண்ண, மட்டக்களப்பு நான்காவது பரம்பரை வைத்தியர், மலையாளத்திலேயும், மாந்திரீக சித்தர் என அழைக்கப்படும், மாந்திரீகக் கலாநிதி சித்த மருத்துவ பண்டிட் மஹேதத்துவ டாக்டர் "மந்திரயோகி" M.B.B.S. (H) S.M.P. (இந்தியா) D.Ac (இலங்கை) யுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஆண், பெண் (காதலன் - காதலி) வசியம்:— நீங்கள் விரும்பும் பெண் அல்லது ஆணை வசியமாக்கி எல்லோருடைய சம்மதத்துடனும் திருமணம் செய்ய முதல் கடிதத்திலேயே முழு விபரமும், இருவரின் பெயர்களும், தெரிந்தால் தாய் தந்தையர்களின் பெயர்களும், ஏமாற்ற மாட்டேன் சத்தியமாகத் திருமணம் செய்வேன் என்றும், பெண்ணைக் காப்பாற்றும் தகுதி அறிய தொழில், வருமானம் பற்றிய விபரமும் எழுத வேண்டும். நேரில் வர முடியாதவர்களுக்கு மருந்து மந்திரம் செய்து பார்சலில் அனுப்பப்படும். 3 ரூபா 50 சத முத்திரையும் 50 சத முத்திரை ஒட்டிய சுயவிலாசமிட்ட கவரும் அனுப்புபவர்களின் விடயங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். 10 ரூபா இந்த மணியோடர் அனுப்புபவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும்.



டாக்டர் "மந்திரயோகி"

இந்தியன் வைத்தியசாலை

கல்லடி, மட்டக்களப்பு
BATTICALOA

# ராதாவின் அபிமான ரசிகை அம்பிகாவாம்

பிஸியாக இருக்கின்ற அம்பிகாவை சந்திக்க பலமுறை முயன்றும் சந்திக்க முடியவில்லை. ஏழு மணிக்கு வந்தால் மேக்கப் நடக்கும் போதே பேட்டியையும் எடுத்து விடலாம் என ராதா சொன்ன யோசனை கடைசியில் கைகொடுத்தது. அவரது யோசனைப்படி மேக்கப் நடந்து கொண்டிருக்கும் போதே பேட்டியும் ஆரம்பமாயிற்று:

★ சினிமாவுக்கு கதை எழுதும் எண்ணம் உண்டா?

ஆர்வமோ உண்டு. பயணம் என்ற கதையை முதல்முதலாக தமிழ் வார இதழுக்கு எழுதினேன். தமிழ் சரியாக எழுத முடியாததால் தான் தொடர்ந்து எழுதமுடியவில்லை.

இன்னமும் கதை எழுதுங்கள் எனக் கேட்கின்றனர். முயற்சிக்கிறேன். அது மட்டுமல்ல திரைக்கேற்ற சில சப்ஜெக்ட் என் இருக்கிறது. அதை டெவலப் செய்து எழுத வேண்டும்.

★ நடிப்பில் முதிர்ச்சி ஏற்பட்டு இருக்கிறதா?

வெளிவந்துள்ள பல படங்கள் நம்பிக்கையை கொடுத்துள்ளன. தனிப்பட்ட முறையில் என் நடிப்பு பாராட்டப்பட்டு இருக்கிறது. கேரக்டர்கள் சரியாக அமைந்து இருந்தால் திறமையை காட்ட முடியும். அப்போதுதான் நடிப்பும் முதிர்ச்சி பெற முடியும்.

★ அம்பிகா, நடிகை அம்பிகா, இரண்டுக்கும் நடைமுறையில் வேறுபாடு என்ன?

இரண்டு பேரும் இரண்டு துருவங்களாகும். எந்த நேரமும் கலகலப்பாக பேசி வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரிடமும் பழகுபவள் — நடிப்பிலே சிரத்தையும், தயாரிப்பாளருக்கு தொல்லையும் கொடுக்காதவள் — இவள் நடிகை அம்பிகா.

அம்பிகாவின் குணம் — சதா விரும்புவது தனிமை, அமைதி. கதை எழுதுவாள். மனம் விட்டு இனிமையாக பாடுவாள். குடும்பம், அதன் மீது பாசம். குடும்பப் பொறுப்பு, இதுதான் தெரியும்.

★ ராதா நடிப்பில் உங்களை மிஞ்சி விட்டார், சரியா?

(சிரித்தபடி) தனக்கென ஒரு தனி இடத்தை இன்று பெற்று விட்டாள். இதை எவரும் மறுக்க முடியாது. கிளாமர் ரோலில் தான் நடிக்க முடியும் என்கின்றனர். இதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. இவர்களுக்கு நடிப்பை ரசிக்கும் கலையுணர்வு இல்லை என்றுதான் கூறவேண்டும்.

காதல் ஓவியம், ஆனந்த ராகம் போன்ற படங்களில் ராதாவின் நடிப்பை பார்த்த பிறகுதான் அவளின் வளர்ச்சி எனக்குப் புரிந்தது. எனக்கு மெய்சிலிர்த்தது.

ராதா என் தங்கை என்பதற்காக கூறவில்லை. இந்த படங்களை பார்த்த பிறகு நானே அவளின் ரசிகையாகி விட்டேன்.

★ இந்தி படங்கள்?

காலத்தை எதிர்நோக்கிக் கொண்டு இருக்கிறேன். விரைவில் நடிப்பேன். எனக்கு இந்தி தெளிவாக பேச வரும். எந்த கேரக்டரிலும் நடிக்கவும் முடியும். கலைக்கு மொழி ஏது?

★ பாக்கியராஜ் இயக்கும் வேறு படங்களில் நடிக்கவில்லையே ஏன்?

நடிக்காததுக்கு தனிப்பட்ட காரணம் ஏதும் கிடையாது. ஏ. வி. எம். படத்துக்காக கேட்ட போது டேட் கிடையாது. எனக்கு ஏற்ற கேரக்டர் என இருந்தால் அழைப்பார். எனக்கு கால்ஷீட் இருந்தால் நடிப்பேன்.

★ இலட்சியங்கள் என்னென்ன?

கலையுலகை விட்டு விலகிய பின்பும் இது அம்பிகாவின் படம் என பேச வேண்டும்.

சிறந்த நாவலாசிரியையாக பெயர் பெற வேண்டும். இவை இரண்டுமே என் இலட்சியங்கள்.

(ஜ-10)

## பாலு மகேந்திரா டைரக்ஷனில் மீண்டும் கமல்

பாலு மகேந்திரா டைரக்ஷனில் கமலஹாசன் நடிக்கும் புதிய படம் உருவாகிறது. ருத்ரையா தயாரிக்கிறார்.

பாலு மகேந்திரா டைரக்ட் செய்த "மூன்றாம் பிறை" படத்தில் கமலஹாசன் நடித்தார் அல்லவா?

இப்போது கமலஹாசன் நடிக்கும் மற்றொரு படத்தை பாலு மகேந்திரா டைரக்ட் செய்கிறார்.

"அவள் அப்படித்தான்" "கிராமத்து அத்தியாயங்கள்" ஆகிய படங்களை தயாரித்த டைரக்டர் ருத்ரையாவின் சொந்தப் படம் இது.

குமார் ஆர்ட்ஸ் சார்பில் உருவாக இருக்கும் இந்தப் படத்துக்கு இன்னும் பெயர் சூட்டப்படவில்லை.

கதாநாயகன் கமலஹாசன். கதாநாயகி உட்பட மற்ற நடிகர் நடிகைகள் தேர்வு நடைபெற்று வருகிறது.

மனதைக் கவரும் காதல் காட்சிகள், இதயத்தை இழுக்கும் கவர்ச்சி நடனங்கள், பயங்கர சண்டைகள் நிறைந்த மசாலா படமாக இது தயாராகிறது.

கதை, திரைக்கதை வசனம் ஒளிப்பதிவு, டைரக்ஷனை பாலு மகேந்திரா ஏற்றுள்ளார். இசை இளையராஜா. (ஜ-10)



இளமைக் கால இன்பக் கனவுகளில் இணைந்து நினைத்திருக்கும் இளம் ஜோடி மோகன் — ஊர்வசி. படம்: இளமைக் காலங்கள். (ஜ-10)



"ஆடியே திருவது" என்று சிலுக்கு சுமிதாவும், "என்ன வந்தாலும் ஆட விட மாட்டேன்" என்று ரவியும் மோதிக் கொள்வது எதற்காக? "கராத்தே கவி"யைத்தான் கேட்க வேண்டும். (ஜ-10)

## இரட்டை வேடத்தில் ராஜேந்தர்

தஞ்சை சினிஆர்ட்ஸ் பட நிறுவனத்தினர் தயாரித்து வரும் "தங்கைக்கோர் கீதம்" வண்ணப் படத்தின் படப்பிடிப்பு தொடர்ந்து நடக்கிறது.

"உயிருள்ளவரை உஷா" படத்தில் செகின் ஜெயபாலாக நடித்து மக்கள் மனதில் இடம் பிடித்த டி. ராஜேந்தர் இப் படத்தில் சூரக் கருப்பன் என்னும் வேடத்தில் பாசமுள்ள அண்ணனாகவும் தொழிலாளர்களின் தலைவனாகவும் நடிக்கிறார்.

சமீபத்தில் இப் படத்திற்காக கே. ஆர். விஜயா தோட்டத்தில் சிவகுமார் — நளினி சம்பந்தப்பட்ட "இது ராத்திரி நேரம் என் தூக்கத்தை காணோம்" என்ற பாடல் காட்சி 3 தினங்கள் விடிய விடிய படமாக்கப்பட்டது.

நடிகர் நாகேஷ் மகன் பாபு, காந்திமதி மனோகரன், எஸ். எஸ். சந்திரன், சத்யராஜ் உசிலைமணி, ஹாஜா ஷெரீப், ராமராவ், ரஜினி மற்றும் பலர் நடிக்கின்றனர்.

இப்படத்தின் ஒளிப்பதிவை டி. ராஜேந்தர் ஒளிப்பதிவு இலாகாவான மூவிஸ்டைல் ஏற்றுள்ளது

உஷா ராஜேந்தர் தயாரிக்கும் இப்படத்தின் கதை, திரைக் கதை, வசனம் பாடல்கள் இசை டைரக்ஷனை டி. ராஜேந்தரே ஏற்றுள்ளார். (ஜ-10)

## நீங்கள் கேட்டவை

பிலிம்கோ பட நிறுவனத்தினர் "நீங்கள் கேட்டவை" என்ற பெயரில் ஒரு வண்ணப் படத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளனர்.

பிரபு — ராதா இணைந்து நடிக்கும் இப்படத்தில் ஜெய்சங்கர் எம். என். நம்பியார், சிலுக்கு சுமிதா, பானுச்சந்தர் மற்றும் பலர் நடிக்கின்றனர். இப்படத்தின் முதல் பாடல் ஒலிப்பதிவு தொடக்க விழா பிரசாத் ஒலிப்பதிவு கூடத்தில் நடைபெற்றது.

இப்படத்தின் கதை, வசனம். டைரக்ஷன் ஒளிப்பதிவு ஆகிய பொறுப்புகளை பாலு மகேந்திரா ஏற்றுள்ளார். (ஜ—10)



என்னதான் கவர்ச்சி நடிகையாக இருந்தாலும் முகத்தில் மலர்ச்சி இல்லையேல் பயனேது? "விலகி ஓடும் வெள்ளங்கள்" படத்தில் சோக கீதமிசைக்கும் அனுராதா. (ஜ—10)

## நாடோடியின் காதல் கதை படமாகிறது

இஸ்ஜத்பெச் என்ற பழங்கால வணிகரைப் பற்றிய நாடோடிக் காதல் கதை, சோவியத் இந்திய ஒத்துழைப்புடன் திரைப்படமாக எடுக்கப்பட இருக்கிறது.

இதன் கதை, லைலா மஜ்னு கதை போன்றதாகும். ஓர் இளம் வியாபாரி, ஒரு ஜாடியில் தீட்டப்பட்டுள்ள அழகியின் ஓவியத்தைக் கண்டு, அவளிடம் மனதைப் பறிகொடுக்கிறான்.

அவளைத் தேடிக் கொண்டு தன்நாட்டை விட்டு நெடும் பயணம் புறப்படுகிறான். அவனுக்கு ஏற்படும் அனுபவங்களைச் சித்திரிப்பதுதான் கதை.

"சோவின் ஃபிலிமும்" உஸ்பெக்கிஸ்தானில் உள்ள கே. யாரிமதோவ் ஸ்டுடியோவும் இந்தியாவைச் சேர்ந்த "ஈகிள் பிலிம்ஸ்" நிறுவனமும் சேர்ந்து இந்தப் படத்தை தயாரிக்க இருக்கின்றன.

சோவியத் உஸ்பெக்கிஸ்தானின் பிரபல டைரக்டரான லத்தீஃப் ஃபைசியேவ் இந்த படத்தை டைரக்ட் செய்ய இருக்கிறார்.

இந்தக் கதையைத் தேர்ந்தெடுத்தது ஒரு தற்செயலான நிகழ்ச்சியல்ல. இது இந்தியாவில் பஞ்சாப், காஷ்மீர் பகுதிகளில் மிகவும் பிரபலமானது" என்று டைரக்டர் ஃபைசியேவ் கூறினார்.

இதன் திரைக்கதையை யு. உமர்பெக்கோவும், எல். ஃபைசியேவும், இந்தியப் படத் தயாரிப்பாளர்களான டி. சிக்காவுடனும் யு. மேஹ்ராவுடனும் சேர்ந்து எழுதியிருக்கின்றனர். படத்தின் ஷூட்டிங் தாஷ்கென்டில் ஆரம்பமாகும். (ஜ-10)

## கோடம்பாக்கம் டயரி

பிரபல படக் கம்பெனிகளில் பாக்கியராஜ் நடிப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், பாக்கியராஜின் "கால்ஷீட்" சுலபமாக கிடைக்க வழி இல்லாததால், வேறு ஒரு நடிகர் நடிப்பதாக கேள்வி.

★

ஏவி. எம். புரொடக்சன்ஸின் "தூங்காதே தம்பி தூங்காதே" என்ற படத்தில் நடிப்பதற்கு ஏவி. எம். படப்பிடிப்பு நிலையத்துக்கு மொட்டைத் தலையன் மாமிச மலை போன்ற ஒரு மனிதர் வந்திருந்தார். இவர் அங்கிலேயர், வயது 72. கமலஹாசன் உட்பட, இந்த "மலை"யை சுற்றி நின்று யானையை குழந்தைகள் வேடிக்கை பார்ப்பது போல பார்த்தவர்கள் ஏராளம்!

★

மலையாளப் பட உலகிலும் சிலுக்குக்கு இப்போது கடும் கிராக்கி! சிலுக்கின் 2 டான்ஸ் பகுதிகளும் போதும்! அதுவும் பக்கம் விசுமாக "கவர்ச்சி"யாக புகுத்தினால் போதும் படம் நல்ல விலை போகும் என்று பல பட அதிபர்கள் எண்ணுவதாக கேள்வி!

★

மகேசரின் பெயர் பெற்ற நாடகங்களில் ஒன்று "விசுவாமித்திரர்". பேராசிரியர் ஏ. எஸ். பிரகாசம் கதை, திரைக் கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்பு ஏற்க "விசுவாமித்திரர்" திரைப்படமாகும் என்று தெரிகிறது!

விசுவாமித்திரராக சிவாஜிகணேசன், துஷ்யந்தனாக பிரபு, சகுந்தலையாக ஸ்ரீதேவி நடிப்பார்கள் என்றும் சினிமா வட்டாரத்தில் பேசப்படுகிறது. (ஜ-10)

## ஒரு இளைஞனின் டைரி

அன்வாரி பிலிம்ஸ் தயாரிக்கும் புதிய வண்ணப் படத்தின் பெயர் "ஒரு இளைஞனின் டைரி".

இதில் கதாநாயகனாக அன்வாரி நடிக்கிறார்.

கௌரவ வேடத்தில் சரிதா, மேனகா, ரூபா, சுமதி, எஸ். வி. சேகர், சந்திரசேகர், தியாகுவுடன் பல பிரபல இயக்குனர்களும், இசையமைப்பாளர்களும் கூட இதில் நடிக்கவிருக்கிறார்கள்

இசை: சங்கர் - கணேஷ், ஒளிப்பதிவு கோபால்ராவ்.

கதை, திரைக்கதை, வசனம் டைரக்ஷன் அனைத்தையும் அன்வாரி ஏற்றுள்ளார்

ஒரு பத்திரிகையாளரை மையமாக வைத்து எழுதப் பட்ட கதை இது. (ஜ-10)

## முறைப்பெண்ணை மணந்தார் மோகன்!

மோகனுக்கும் அவரது முறைப் பெண்ணுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

மோகன், சசிகலாவை உயிருக்கு உயிராகக் காதலித்தார். ஆனால், அவர் மீது சசிகலாவுக்கு சந்தேகம் ஏற்பட்டது. ஆகவே, அவர்களது காதல் முறிந்தது.

பிறகு, மோகனின் முறைப் பெண்ணை ரோகிணிக்கும் மோகனுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியில் இருவரும் உல்லாசமாகப் பாடி ஆடினர்.

"ராகவனே, ரமணா, ரகுநாதா, பாற்கடல் வாசா, ஜானகிநேசா" என்று ரோகிணி பாடி ஆடினர்.

இப்படி ஓர் காட்சி, மதர்லாண்டு பிக்சர்சாரின் "இனமைக்காலங்கள்" படத்திற்காக சாரதா ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.

மோகன் — சசிகலா ஜோடியாக நடிக்கும் இதில், ரோகிணி, ஜனகராஜ், மனோஜ், பானுப்ரியா, கல்லாப்பெட்டி சிங்காரம், காந்திமதி, எ. ஆர். எஸ். கருமாரி, அனுராதா பாலாஜி, பத்மஜா, பேபி பத்மா மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

கோவைத் தம்பி, ரத்தினம் இணைந்து தயாரிக்க, மணிவண்ணன் டைரக்ட் செய்கிறார். சபாபதி ஒளிப்பதிவு செய்கிறார். (ஜ-10)



பொழுது விடிந்தது கூடத் தெரியாமல் பிரபுவின் கையை சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறாரே, கலைஞர்? (ஜ—10)

## உஷ்.... இது ரகசியம்

மம்பட்டியான் வெற்றி பெறவில்லை என்றால் தனது தாடியை நீக்கி விட முடிவு செய்து இருந்தாராம், "மம்பட்டியான்" ராஜன்! வெற்றியும் பெற்றது. அவருடைய அழகான தாடி, மீசையும் நிலைத்து இருக்குமாம்!

★

மோகன நடிகர் மீது நவீனமான நடிகையின் பார்வை விழுந்திருப்பதாக சொல்லப்படுகிறது! பாவம் மோகன நடிகர்! இதுபோல எத்தனை இளம் நடிகைகளின் பார்வைக்கு ஆளாகி தவிக்கிறாரோ!

★

சரித நடிகை எவ்வளவு பெரிய நடிகை. அதனால் தனக்கென்று ஒரு அலங்கார நிபுணியை அமர்த்திக் கொள்ளவில்லையாமே! இது ஏன்? இதுபோல "மேக்கப்" நிபுணரின் சாமர்த்தியத்தையும் அதிகம் நாடுவது கிடையாதாம். தன் கையே தனக்கு உதவி என்ற முடிவு எடுத்த சரித நடிகை.

★

மாதவ நடிகை சில நாட்களுக்கு முன் தனது பிறந்த நாளைக் கொண்டாடினார். விழாவுக்கு வர அவர் அழைப்பு விடுத்தது ஒன்றிரண்டு இளம் நடிகைகளுக்கு மட்டுமே! அந்த நடிகர்களும் தவறாமல் கலந்து கொண்டு "விரைவில் தாலிக் கயிற்றுடன் காட்சி தருக!" என்று வாழ்த்தினார்களாம்.

★

ராணியாம் சந்தானாம்! இந்த நடிகை டி. ராஜேந்தர் டைரக்ட் செய்யும் ஒரு படத்தில் முதலில் நடிக்க ஏற்பாடாகி பின்பு நடிக்கும் வாய்ப்பை இழந்தவர். இந்த புது நடிகைக்கு பெங்களூரில் நடைபெறும் ஒரு தமிழ்ப் படத்தில் கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்பு கிட்டியது.

ஆனால், சென்னையில் இருந்து அங்கே போக தனக்கும் தனது தாய்க்கும் விமான டிக்கட் வாங்கி தராதது ஏன்? பெங்களூரில் பிரபல நட்சத்திர ஹோட்டலில் தங்க வைக்காதது ஏன்? இப்படி எல்லாம் கேட்டு பிடிவாதம் செய்தாராம்! பலன், அந்தப் படத்தில் இருந்தும் நீக்கப்பட்டாராம். ஒரு புது நடிகைக்கு இப்படி என்றால்...?

★

வெற்றி கார்த் நடித்த படத்தில் நடித்தவர்தான் சரித நடிகை. ஆனால், இப்போது அவருடன் ஜோடியாக நடிக்க மறுக்கிறாராம். மறுப்பது ஏன்? பல படங்களில் நடித்த பின் நடிகை ஆனதும், குணமும், மாறுமோ!, மாறலாமா? மாறக் கூடாதே! (ஜ-10)

# அவனுக்குத் தான் அவள்

— மோகன் —

சிறுகதை

அந்தக் டைசிப் பஸ் ஒரு சிறிய குலுக்கலுடன் திடீரென்று நின்றது. ஒன்றின் மீது ஒன்றாக நிலைத்திருந்த, உருவமற்ற பல விஷயங்களைப் பரிமாறிக் கொண்டிருந்த அவ்விருவரது பார்வைகளும் திரும்பி டிரைவரின் ஆசனத்தை நோக்கின. அப்போது அது காலியாகி விட்டிருந்தது. பஸ்ஸுக்குள் மூன்றே பிரயாணிகள்தான்.

சீட்டில் தூங்கி வழிந்து கொண்டிருந்த கண்டக்டரும் விழித்துக் கொண்டு "மறுபடியும் ரிப்பேரா?" என்று கேட்டுக் கொண்டே பரபரப்போடு கீழே இறங்கினார்.

இதற்குள் தூக்கம் கலைந்து கொண்டவர் அந்த இளைஞனும், அவனுக்கு எதிர்ப்புறம் இரண்டு சீட்டுக்கு முன்னால் உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணும், அவள் தன் பக்கத்தில் அமர்ந்திருந்தவரைப் பார்த்தாள். அவர் அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார்.

அவனுக்கும் அவருக்கும் என்ன உறவு? ஒரு வேளை. நினைக்கவே அவனுக்குக் கஷ்டமாயிருந்தது.

அவன் அவளைத் தன் பின்னால் வரும்படி ஜாடை காட்டி விட்டு எழுந்து சென்று பஸ்ஸின் பின் கதவை அடைந்து கீழே இறங்கி நின்று கொண்டான்.

அவளும் அவனருகே வந்து நின்றாள்.

உணர்ச்சிப் பெருக்குடன்: "கிருபா உங்களை இங்கே..." அவள் குரல் நடுங்கியது.

ஆசிரியர் கல்லூரி ஒன்றில் கிருபாகரன் படித்துக் கொண்டிருந்தபோது முதலாண்டு பி.ஏ.வில் வந்து சேர்ந்தாள் சுசீலா. வனப்பையும் செழுமையையும் அதிகமாகவே பெற்றிருந்த அவளிடம் தங்கள் வாழ்வை அர்ப்பணிக்க அந்தக் கல்லூரியில் ஏராளமான பேர் துடித்தபோதும் அவள் மனம் நாடியது கிருபாகரனைத்தான். இருவர் காதலும் வளர்ந்தது.

வருட முடிவில் அவள் திடீரென்று புறப்பட வேண்டியதாயிற்று. ஊரிலிருந்து பணம் அனுப்பிக் கொண்டிருந்த தந்தை திடீரென்று மறைந்து விட்டார். அவன் குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு வேலைக்காக முயன்றதில் காலம் ஓடி மறைந்து விட்டது. இப்போதுதான் நல்ல வேலையொன்றில் அமர்ந்தவன் அபீஸ் காரியமாக வெளியூர் வர நேரிட்டபோது அவளைத் தற்செயலாக இந்த பஸ்ஸில் சந்தித்திருன்.

"சுசீலா யார் அந்த மனிதர்?" என்றான்.

சுசீலா தலையைக் குனிந்தபடி எல்லாவற்றையும் சுருக்கமாகக் கூறி முடித்தாள்.

"என் தந்தைக்கு வியாபாரத்தில் பெரும் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. அந்தச் சமயத்தில் கைகொடுத்து உதவி செய்ய யாருமில்லை. நடுத்தெருவில் விழவிருந்த என்னைக் காப்பாற்றியவர் இந்த என் மாமாதான். என்னைக் கல்யாணம் செய்து கொள்வதாக இருக்கிறார். அதற்காகத்தான் அவருடைய சொந்த ஊருக்குப் போய்க் கொண்டிருக்கிறோம்."

மௌனத்தில் ஒரு நிமிடம் கழிந்தது.

திடீரென்று அவன் கேட்டான். "நீ...நீ... என்னுடன் வந்து விடுகிறாயா சுசீலா?"

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். "அது எப்படி... என்னைக் காப்பாற்றியவருக்கு அது துரோகமில்லையா...?"

அவன் தொடர்ந்தான்: "சுசீலா. அதெல்லாம் வைத்தியக்காரப் பேச்சு. அன்றும் இன்றும் நீதான் எனக்கு எல்லாம். இப்போது எனக்குக் கிடைத்திருப்பது நல்ல வேலை. நீ என்னுடன் சென்னை வந்து விட்டால் நம் இருவர் வாழ்க்கையும் இனிப்பாகிவிடும்..."

சில விநாடிகளுக்குப் பின் அவள் கேட்டாள்: "நான் என்ன செய்ய வேண்டும்?"

"சொல்கிறேன் இரு".

பஸ் டிரைவர் அவர்களை நோக்கி வந்தார். "மன்னிக்கணுங்க சார். பஸ் கிளம்பாது. ஒன்றும் பண்ண முடியவில்லை."

கண்டக்டர் சொன்னார்: "ஒன்று செய்யலாம். நீங்க அதோ விளக்குத் தெரியுதே. அது ஒரு சின்ன ஊர். இந்த வண்டிப் பாதையோடு நடந்து ஒரு பர்லாங் தொலை போனால் அங்கே போய்ச் சேர்ந்திடலாம், முதல் வீடு கிராமத் தலைவர் வீடுதான். நீங்க மூன்று பேரும் இன்று ராத்திரி மட்டும் அங்கே தங்கிக் கொண்டால் காலையிலே முதல் பஸ் வந்ததும் அதிலே நீங்கள் ஏறிப் போயிடலாம்."



"சுசீலா என்ன நடந்தது?" என்ற குரல் வெகு அருகில் திடீரென்று கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பினாள் சுசீலா. அவள் மாமாதான். "பஸ் ரிப்பேர் மறுபடியும்" என்றான்.

கிருபாகரன் கண்டக்டர் கூறிய யோசனையை அவரிடம் தெரிவித்தான்.

"நல்ல யோசனைதான், வாருங்கள் போகலாம்" என்றார் அவர்.

கிராமத் தலைவரின் வீடு வந்தது. கண்டக்டர் முன்னால் சென்று கதவைத் தட்டினார். பதிலில்லை. சுசீலாவின் மாமாவும் தொடர்ந்து கதவைத் தட்டினார்.

தனக்கு வெகு அருகில் நின்றிருந்த சுசீலாவின் காதில் ஏதோ கிசுகிசுத்தான் கிருபாகரன்.

கதவு திறந்தது. கண்டக்டர் பக்குவமாக அவரிடம் விஷயத்தைக் கூறினார்.

"இதோ இந்த முன் அறையையும் வராந்தாவையும் உபயோகித்துக் கொள்ளலாம்" என்றார் கிராமத் தலைவர்.

கண்டக்டர் விடை பெற்றுக் கொண்டு சென்று விட்டார்.

"ரொம்ப நன்றி சார்" என்றான் கிருபாகரன் வீட்டுக்காரரிடம்.

"ஆமாம், பஸ்ஸில் மொத்தம் நீங்கள் மூன்று பேர்தான் வந்தீர்களா?" என்றார் கிராமத் தலைவர்.

"ஆமாம் சார், டைசி பஸ் இல்லையா?" என்று கிருபாகரன் தொடர்ந்து "என் பெயர் கிருபாகரன். இவள் என் மனைவி சுசீலா. வழியில் ஏறியவர் இவர்" என்றான்.

"மிஸ்டர்!" என்று ஓர் அதட்டல் போட்டார் சுசீலாவின் மாமா. அதற்கு மேல் பேச நா வரவில்லை அதிர்ச்சியினால்.

கிருபாகரன் சுசீலாவைப் பார்த்தான் வெற்றிப் புன்னகையுடன். அவள் ஓரடி முன்னால் வந்து உறுதியாக அவன் கையைப் பிடித்துக் கொண்டு நின்றாள், அவன் கூற்றை ஆமோதிப்பவள் போல.

தலையைப் பிடித்துக் கொண்டு மயங்கியவராக உட்கார்ந்து விட்டார் சுசீலாவின் மாமா.

"பாவம் வயதானவர்" என்று கிராமத் தலைவரிடம் கூறிய கிருபா, அவரைத் தூக்கி அறையில் கிடத்தினான்.

காலையில் சுசீலாவின் மாமா எழுந்தபோது மணி ஆறு இருக்கும்.

"சுசீலா" என்றழைத்தபடி வெளியே வந்தார்.

கிராமத் தலைவர் நின்றிருந்தார். "யாரைத் தேடுகிறீர்கள்? கணவன் மனைவி இரண்டு பேரும் அதிகாலையிலேயே புறப்பட்டுச் சென்று விட்டார்கள். ரயிலில் போவதாகச் சொன்னார்கள்" என்றார்.

மறுநாள் மாலை மணி ஏழு.

சந்திரன் தன் வீட்டு ஹாலில் அமர்ந்து கொண்டிருந்தார். அவரது பார்வை எங்கோ வெறித்து நோக்கியபடி இருந்தது.

அவரால் அந்த அதிர்ச்சியை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அதுவரை அவரிடம் எந்தவிதமான சிறு அதிருப்தியும் காட்டியிராத சுசீலா ஒரே இரவில் இப்படி மனம் மாறித் தன்னைத் தூக்கியெறிந்து விட்டதை அவரால் இயல்பாக நினைக்க முடியவில்லை.

டெலிபோன் ஒலித்தது.

மெதுவாக எழுந்து சென்று ரிசீவரைக் காதில் வைத்துக் கொண்டு "ஹலோ" என்றார்.

"ஹலோ மிஸ்டர் சந்திரன் தானே?"

"ஆமாம்."

"நான் இன்ஸ்பெக்டர் தேவசகாயம் பேசுகிறேன். உங்களுக்கு ஒரு நல்ல செய்தி. சுசீலாவின் உயிருக்கு ஆபத்து ஒன்றுமில்லை."

"என்னது சுசீலாவுக்கு என்ன விபத்து?"

"ஆமாம் சார். நீங்கள் கல்யாணம் செய்து கொள்வதாக இருக்கிறீர்களே, அதே சுசீலாதான். இன்று காலை நடந்த ரயில் விபத்து பற்றி உங்களுக்குத் தெரிய வந்திருக்குமே? அதில் வந்த மிஸ் சுசீலா உயிருக்கு ஆபத்து ஒன்றுமில்லாமல் தப்பி விட்டார். அவருடனிருந்த உங்கள் உறவினர் ஒருவர் — கிருபாகரன் என்பவர் இறந்து விட்டார். சுசீலாதான் உங்களுக்குத் தகவல் தரச் சொன்னார்."

ஒரு கணம் யோசனையில் ஆழ்ந்த சந்திரன் மெதுவாகக் கூறினார். "மன்னிக்க வேண்டும். விபத்தின் அதிர்ச்சியினால் அப்படிச் சொல்கிறாள் போல் இருக்கிறது. இறந்துபோன கிருபாகரன்தான் அவள் கணவன். சந்தேகமிருந்தால் கிராமத் தலைவரைக் கேளுங்கள்."

"டக்"கென்று போனை கீழே வைத்தார் சந்திரன். திருப்தி அவர் முகத்தில் பரவியது.

# விடிவு

— செ. குணரத்தினம் —

கோழியும் குயிலுமாய்ச் சேர்ந்து — தினம்
கூவிட விடியுமாம் காலை!
ஏழையென் இருள்சூழ்ந்த வாழ்வை — இங்கு
எவர் கூவி விடியவைப்பாரோ!

★

வேண்டுமென்றே நாளும் என்னை — துன்ப
வேதனைத் தீயினில் தீய்க்க
ஆண்டவன் தந்தானே செல்வம் — ஐயோ
ஆண் மூன்று பெண்களோ நான்கு!

★

சந்தியில் போட்ட கல்லாக — என்
சம்பளம் உயர வேயில்லை!
வெந்தணல் மீதிலே சுட்டு — வந்து
விழுதல்போல் விலைகளின் ஏற்றம்!

★

புகைவண்டி, பஸ்கார எல்லாம் — உடன்
பச்சென்று மேலேறிப் போச்சு!
வகையொன்றும் தெரிய வேயில்லை — வாழ்வின்
வழியெல்லாம் இருள் சூழ்ந்ததொல்லை.

★

மூத்தவன் குமரனாகப் போனான் — மீண்டும்
மூதாகாமல் மனைவி தாயானாள்!
ஆத்திலும் நான்பாய்ந்து பார்த்தேன் — என்
ஆவிதான் போகவே யில்லை!

★

ஒன்று விட்டொருநாளில் சோறு — நாங்கள்
உண்பதும் இப்போது இல்லை!
அண்டை அயலெல்லாம் கேட்டு — வீண்
அவமானம் உண்டாகிப் போச்சு!

★

கடன்தொல்லையால் இன்று வீடு — தண்ணீர்
கடலாக உருவாகிப் போச்சு!
விடமாட்டேன் எனச்சொல்லித் துன்பம் — எங்கள்
வீட்டிலே குடியேற லாச்சு!

★

இருள்சூழ்ந்த எம்வாழ்வு என்று — துன்ப
இருள் நீங்கி ஒளிவெள்ளமாகும்!
பிறந்தாலும் இனிஇந்த மண்ணில் — ஏழைப்
பிறவியாய்ப் பிறக்கவே வேண்டாம்!

★

கோழியும், குயிலுமாய்ச் சேர்ந்து — தினம்
கூவிட விடியுமாம் காலை!
ஏழையென் இருள்சூழ்ந்த வாழ்வை — இங்கு
எவர்கூவி விடிய வைப்பாரோ!

# பேசும் பத்திரிகை

கண் பார்வையற்றவர்கள் நாட்டு நடப்புகளை அவ்வப்போது தெரிந்து கொள்வதற்கு வசதியாக "பேசும் செய்திப் பத்திரிகை" ஒன்று இங்கிலாந்தில் வெளியாகிறது.

செய்திப் பத்திரிகை ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்ற ஒருவர்தான் இந்தப் பேசும் பத்திரிகைக்கு ஆசிரியராக இருக்கிறார். அவருக்கு உதவியாக இரு டெலிவிஷன் நடிகர்கள் இருக்கிறார்கள். இவர்கள்தான் மேற்படி பத்திரிகையை உருவாக்கும் ஆசிரியர் குழு.

தினந்தோறும் செய்திப் பத்திரிகையில் இருந்து முக்கியமான செய்திகளை வெட்டி எடுத்து அதன் சாராம்சத்தை புதிய நடையில் எழுதுவார் ஆசிரியர்.

அதனைத் தெளிவாக புரியும் வகையில் படித்து "டேப்"பில் (ஒலிப்பதிவு நாடாவில்) பதிவு செய்து சிறிய டப்பியில் வைத்து விடுவார்கள்.

இந்த டேப்பை இயக்க, அதன் மீது உள்ள விசையை தட்டினால் போதும், ரேடியோவில் செய்தி வாசிப்பதைப் போல் இந்த டேப்பில் இருந்து செய்தி வாசிக்கப்படுகிறது. கண் பார்வையற்றவர்களுக்கு இதுவோர் வரப்பிரசாதமல்லவா?

(ச-11)

# ஆரோக்கியம் தரும் அன்னை வேளாங்கண்ணி

## செக்கடித்தெரு ஆலயத்தில் இன்று திருவிழா

(அன்னை வேளாங்கண்ணி மாதாவின் திருநாள் இன்று செக்கடித் தெரு புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தில் கொண்டாடப்படுகிறது. அதையொட்டியே இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.)

தென்னிந்தியாவில் மிகவும் பிரபல்யம் பெற்றது வேளாங்கண்ணி திருத்தலம்.

மரியன்னை ஆரோக்கிய மாதா என்ற திருநாமத்தில் கோவில் கொண்டிருக்கும் தேவஸ்தானமும் இதுவே.

முடமாகிய சிறுவன் ஒருவன் மூலமே வேளாங்கண்ணி என்ற அந்தச் சிற்றூரில் அன்னைக்கு ஆலயம் எழுப்பப்பட்டது.

தேவபாலனை திருக்கரத்தில் ஏந்தி வந்த அன்னை அவள்; மோர் விற்றுக் கொண்டிருந்த அந்த ஏழைச் சிறுவன்பால் மனம் இரங்கினள். தாகம் தணிக்க மோர் கேட்டாள், மறுப்பின்றிக் கொடுத்தான் சிறுவன்.

பலன்......?

"எழுந்து நட" என்ற அன்னையின் வார்த்தைகளை அடுத்துக் குணமானான் சிறுவன்.

நாகப்பட்டினத்தில் உள்ள தன் பக்தனிடம் சென்று விவரம் அறிவிக்குமாறு சிறுவனை அனுப்பினாள் அன்னை.

தகவல் அறிந்த அந்த பக்தர் வேளாங்கண்ணி வந்தடைந்தார்.



ஓலைக் கொட்டிலில், அன்னையின் ஆலயம் நிறைவேறியது! ஆலயம் உருவானது.

தேவ அன்னையின் பக்த கோடிகள் அணி திரண்டு வந்தனர்.

கஷ்ட நஷ்டங்கள், துன்ப துயரங்கள், நோய் நொடிகள் தீர அன்னையின் அருளை நாடிய அவளது அடியார்களின் வேண்டுதல்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டன; அற்புதங்கள் பல நிகழ்ந்தன; அன்னையின் புகழ் அன்னையாளுள் அவள்!

17ஆம் நூற்றாண்டில் குடிசைக் கோவிலாக இருந்த அன்னையின் இருப்பிடம் கோபுரம் போல் வானளாவ உயர்ந்தது.

புயலில் சிக்கிய போர்த்துக்கேய கப்பலோட்டிகளுக்கு அருள்பாலித்ததன் மூலம், அழகுற கோவிலும் அமைந்தது!

1933 ஆம் ஆண்டில் 82 அடி உயரத்திலான இரு பெரும் கோபுரங்களுடன் அன்னையின் ஆலயம் உருப்பெற்றது.

தென்னிந்தியாவில் இருந்து அன்னையின் புகழ் பாரெங்கும் பரவத் தொடங்கியது. இலங்கையிலும் ஆரோக்கிய மாதா அருள்பாலித்து நிற்கிறாள்.

குறிப்பாக கொழும்பிலுள்ள செக்கடித் தெருவில் நீண்ட காலமாகப் பாழடைந்து கிடந்த அன்னையின் ஆலயம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் உயிர்பெற்றது.

புனரமைப்பு வேலைகளை அடுத்து வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதாவின் அருளை நாடி வரும் அடியார்களின் எண்ணிக்கை இங்கு அதிகரிக்க ஆரம்பித்தது.

கத்தோலிக்கத் திருச்சபை பிரகடனப்படுத்தியபடி செப்டம்பர் மாதம் 8ஆம் திகதி ஆரோக்கிய அன்னையின் திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்தத் திருநாளையே இன்று அன்னையின் பக்த கோடிகள் செக்கடித் தெரு புனித ஆரோக்கிய மாதா ஆலயத்திலும் கொண்டாடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

# சோதிட சிந்தாமணி

சிந்தாமணி சோதிடர்: திரு. ஆர்வி

11 — 9 — 1983 தொடக்கம் 17 — 9 — 1983 வரை உள்ள பலாபலன்கள்.

## மேஷம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் கால்.

மேஷம்:— தேகாரோக்கியம் நன்றாக இருக்கும். சிநேகிதர்களால் கிடைக்கும் எதிர்பாராத உதவியால் முன்னேற வழியுண்டு. பழைய கடன்கள் திரும்பி வரும். கோர்ட் வழக்குகளில் வெற்றி கிடைக்கும். பிரயாணத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சிறு காயங்கள் ஏற்பட இடமுண்டு. பிள்ளைகளால் கவலை தோன்றலாம்.

## ரிஷபம்

கார்த்திகை 2, 3, 4ஆம் கால்கள். ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ஆம் கால்கள்.

ரிஷபம்:— தொழில் ஸ்தாபனத்தில் மதிப்பும், கௌரவமும் உண்டாகும். தீமை செய்ய நினைக்கும் உறவினர்கள் தோல்வி அடைவார்கள். தேகநிலை சிறிது பாதிக்கப்படலாம். மனைவி, மக்கள் அன்பாக இருப்பார்கள். பயணத் தொல்லை குறையும். குடிபானம், பால், தயிர் வியாபாரிகள் ஆதாயம் அடைவார்கள்.

## மிதுனம்

மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ஆம் கால்கள்.

மிதுனம்:— மனக் கவலைகள் படிப்படியாகக் குறைய ஆரம்பிக்கும். ஒரு புதிய சூழ்நிலையில் பிரவேசிக்க வேண்டியிருக்கும். அயலவர், சிநேகிதரால் உதவி கிடைக்கும். நடை நோய் ஓரளவு சுகமடையும். காதல் விவகாரங்கள் மகிழ்ச்சியுடையதாக இருக்கும். அரசியல் வாதிகள் கவலைக்குள்ளாவார்கள். புத்தக வியாபாரிகள் நஷ்டமடைவார்கள்.

## கடகம்

புனர்பூசம் 4ஆம் கால், பூசம், ஆயிலியம்.

கடகம்:— பொருளாதாரம் நன்றாக இருக்கும். அடிக்கடி வீண் மனக்கிலேசங்கள் ஏற்படும். செலவினங்கள் அதிகரித்த போதிலும் கட்டுக்கடங்கியிருக்கும். அயலவரோடு கவனமாகப் பழக வேண்டும். வீண் பழி சுமக்கும் சம்பவங்கள் நடைபெறும். வேலைக்காரர் தொல்லை தருவார்கள். தூர தேசத்தில் இருந்து நல்ல செய்தி கிடைக்கும்.

## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1ஆம் கால்.

சிங்கம்:— குடும்ப நலம் நன்றாக இருக்கும். சொந்தக்காரர்கள் உதவுவார்கள். எனினும், பிள்ளைகளால் உபத்திரவமுண்டு. வீடு, வாகனம் போன்றவற்றால் செலவு ஏற்படும். எதிர்பாராத வகையில் பணம் புரள வாய்ப்புண்டு. தந்தை வழியில் ஒரு சுப காரியம் நடைபெறும். புதிய பொருட்கள் சில வாங்க நேரிடும்.

## கன்னி

உத்தரம் 2, 3, 4ஆம் கால்கள். அத்தம், சித்திரை 1ஆம், 2ஆம் கால்கள்.

கன்னி:— பணப் புழக்கம். தேகாரோக்கியம் நன்றாக இருக்கும். ஆயினும், மனச்சோர்வும், வீண் கவலைகளும் அடிக்கடி ஏற்படும். பிள்ளைகள் அன்பாகவும், ஆதரவாகவும் இருப்பார்கள். மனைவியின் உறவினர்கள் மகிழ்ச்சியான செய்தியுடன் வருவார்கள். மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இது ஒரு பிரச்சினையான வாரம்.

## துலாம்

சித்திரை 3, 4 ஆம் கால்கள். சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் கால்கள்.

துலாம்:— உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். செலவினங்கள் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல் திருப்திகரமாக நடைபெறும். சொந்தக்காரர்களின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும். காதல் துறையில் மகிழ்ச்சி உண்டு. மனதுக்குகந்த கடிதம் வரும்.

## விருச்சிகம்

விசாகம் 4ஆம் கால் அனுஷம், கேட்டை.

விருச்சிகம்:— நண்பர்கள் சிலரால் மன அமைதி குறையும். வீண் அலைச்சலும், பணச் செலவும் உண்டாகும். எனினும், எதிர்பாராத பண வருவாய் மகிழ்ச்சியைத் தரும். விற்க முடியாதென்றிருந்த பொருட்கள் விற்பனையாகும். உத்தியோக உயர்வு, இடமாற்றம் உண்டாகப் பலன் உண்டு. கணவன் — மனைவி உறவு சந்தோஷமாக இருக்கும்.

## தனு

மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் கால்.

தனு:— பணப் புழக்கம் நன்றாக இருக்கும். கடன்கள் தொல்லை கொடா. அரச உத்தியோகத்தருக்கு நிம்மதி உண்டு. மேலதிகாரியின் கடாட்சம் கிடைக்கும். பிள்ளைகளால் மன நிம்மதி குறையும். வாரக் கடைசியில் குடும்பத்தில் ஒருவர் சுகவீனம் அடைவார். எனினும் கவலைக்கு இடமில்லை.

## மகரம்

உத்திராடம் 2, 3, 4ஆம் கால்கள். திருவோணம், அவிட்டம் 2ஆம் கால்கள்.

மகரம்:— இனசனத்தவரின் தொல்லைகள் ஏற்படும். புதிய முயற்சி ஒன்று கருக்கூட்டும், தன்னம்பிக்கையோடும், துணிவோடும், காரியங்களில் ஈடுபட்டால் வெற்றி நிச்சயம். பழைய கடன்கள் திரும்பி வரும். மனைவி வழியால் நன்மையுண்டு. வீடு, நிலம் போன்றவற்றால் செலவேற்படும். அநுகூலமான கடிதங்கள் வந்து சேரும்.

## கும்பம்

அவிட்டம் 3, 4ஆம் கால்கள், பூரட்டாதி, சதயம் 1, 2, 3ஆம் கால்கள்.

கும்பம்:— கஷ்டமான வாரம். நம்பி இருந்தவர்கள் கைவிடுவர். பணத் தட்டுப்பாடு அதிகரிக்கும். கோர்ட் ஏறி வழக்காட நேரிடலாம். நண்பர்களிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பார்க்காமல் பத்திரங்களில் ஒப்பமிடலாகாது. விஷ ஜந்துக்களால் தீங்கு ஏற்பட இடமுண்டு. ஜாக்கிரதை.

## மீனம்

பூரட்டாதி 4ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி.

மீனம்:— இருந்து வந்த மனச் சங்கடங்கள் படிப்படியாகக் குறையத் தொடங்கும். பெரியார்கள், அரசினர் உதவி கிடைக்கும். திடீர்ப் பண வரவுக்கு இடமுண்டு. காணமல் போன பொருட்கள் சில கிடைக்கும். காதல் விவகாரங்களில் மகிழ்ச்சி ஏற்படும். தூரத்துச் செய்தி ஒன்று கவலை தரும். பயணத்தின் போது பாதுகாப்பு அவசியம்.



# கணவரின் மனதைக் கவர்வது எப்படி ?

கணவரின் அன்பை எந்த நாளிலும் பெற வேண்டும் என்று மனைவியர் விரும்புகின்றனர்.

ஆனால், பிடிவாதம், சந்தேகம், விட்டுக் கொடுக்கத் தெரியாத மனோபாவம் போன்றவற்றால் அவர்கள் அன்றாடம் தங்கள் கணவன்மார்களுடன் சண்டையிட்டுச் சச்சரவில் மன உளைச்சல் அடைகின்றனர்.

அழகு, அந்தஸ்து எல்லாமிருந்தும் சில பெண்களுக்கு இருப்தியான மணவாழ்வு கிடைப்பதில்லை.

காரணம் அவர்களது அலட்சியப் போக்கே. தென்றலும் மென்மையும் – யாழும் இசையும் போல தம் கணவர்மாருடன் வாழ அவர்களின் மன நிலையைப் புரிந்து கீழ்வரும் முறைகளைக் கடைப் பிடிப்பார்களாக—

* எந்த வயதிலும் மனைவி பொலிவோடு இருப்பதையே கணவன் விரும்புகிறான். எனவே கணவனின் கண்களில் படும் பொழுது சுத்தமாக உடுத்தி அழகோடு இருங்கள்.

* நீங்களே அவனின் காதலி.

கணவன் விரும்பி அழைத்தால் கைகோர்த்துச் செல்லவும் பின் வாங்காதீர்கள்.

* உணவு ஊட்டுவதில் தாயைப் போலவும், ஆலோசனை கூறுவதில் அமைச்சரைப் போலவும், இன்பம் தருவதில் தாசியைப் போலவும் இருங்கள்.

* தனக்கு எவ்வளவு பிடித்த விடயமாயினும் கணவனுக்கு அது பிடிக்காதவிடத்து விட்டுக் கொடுத்து கணவனுக்கு பிடிக்காததாயினும் கணவன் விரும்புவதை விரும்புங்கள். ஏனெனில், தான் விரும்புவதைப் பற்றிப் பேசும் போதுதான் அவன் சந்தோஷமடைவான்.

* எதற்கெடுத்தாலும் உங்கள் கணவரை சந்தேகப்படாதீர்கள். சந்தேகத்தால் கெட்ட குடும்பங்கள் ஏராளம்.

* கணவனுடைய சாப்பாட்டு நேரத்திற்கு ஏற்றவாறு சமையலையும் மாற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் தனியே சாப்பிட்டால் அது அவனுக்கு அன்புப் பிரச்சினையாகவே இருக்கும். அப்படியில்லாது உங்கள் கணவனுக்கு சாப்பாட்டை வைத்து விட்டு அருகிலிரும் அமையாதீர்கள்.

* திருமணமான அன்றே ஆண்கள் அவர்களை உங்களிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். எனவே நீங்கள் எந்த வேலை இருந்தாலும் அவர் வந்தவுடன் அதனை உதறித் தள்ளிவிட்டு இன்முகத்தோடு பேசுங்கள்.

* கணவனின் குறைகளை எரிந்து விழுந்து சொல்லாமல், பலர் முன்னிலையிலும் பிறருடமும் சொல்லாமல் சமயமறிந்து இதமாக எடுத்துரையுங்கள்.

* பிறர் முன்னிலையில் கணவரின் திறமையையும் செயலையும் அன்பையும் பாராட்டுங்கள். என் கணவர் போல் ஒருவரில்லை என்று வாதிடுங்கள்.

மேற்கண்ட வழிகளை ஏற்று பின்பற்றினால் நிச்சயம் கணவனின் மனதைக் கவர்ந்தவர்களாவீர்கள்.

(ஐ)

## கொலை செய்யும் 'பாதகிகள்' பீகாரில் அதிகம்

இந்தியாவின் பல இடங்களிலும் சிறையில் இருக்கும் பெண்களைப் பற்றிய ஆராய்ச்சி ஒன்று நடந்தது.

அவர்கள் ஏன் குற்றம் செய்தார்கள் என்று நிபுணர்கள் ஆராய்ந்தார்கள்.

மணமான பெண்களே அதிகமாகக் குற்றம் செய்கிறார்கள் என்பது ஆய்வின் முடிவில் தெரிய வந்தது.

பீகார் சிறையில் இருந்த 150 பெண்களில் ஒரு பெண் தான் திருமணம் ஆகாதவள். மற்ற பெண்கள் திருமணம் செய்து கொண்டவர்கள்.

பெண் குற்றவாளிகளில் 100க்கு 93 பேர் கொலை செய்தவர்கள் என்றும் மதிப்பிடப்படுகிறது.

அவர்கள் கூட்டுக் குடும்பமாக வாழுகிறார்கள். மாமியார் கொடுமை, மாமனார் மிரட்டல் கொழுந்தன் நாத்திகளின் அடாவடித்தனம். இந்தக் கொடுமைகளைத் தாங்காமல் பெண்கள் அங்கு கொலை செய்கிறார்களாம்!

பீகாரில்தான் இது அதிகம். அங்கு சிறையில் உள்ள பெண்களில் 96 சதவீதமானோர் கொலைகாரிகளாம்.

(ஐ)

## பகலில் தூங்கினால் பிசாசு பிடிக்குமாம்!

திபெத்தில் ஒருவரும் பகலில் தூங்கமாட்டார்கள்.

பகலில் தூங்கினால் பகல் பிசாசுகள் பிடித்துக் கொள்ளும் என்பது இவர்கள் நம்பிக்கை.

அதனால் சின்னக் குழந்தைகளையும், நோயாளிகளையும் கூட அவர்கள் பகலில் தூங்க விடமாட்டார்களாம்.

(ஐ)





ஒய்யாரமாகப் படுத்திருந்து இந்த நங்கை எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசிக்கிறாள் என்று நினைத்து விடாதீர்கள்.

உடலில் வேண்டாத, அதிகப்படியான சதையைக் கரைத்து, உடலை கச்சிதமாக வைத்துக் கொள்ள அளிக்கப்படும் மின்சார சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறாள் இந்த நங்கை.

இவரது உடலில் பொருத்தப்பட்டிருக்கும் கருவியை தினமும் 35 நிமிடங்கள் பயன்படுத்தினால் போதும், என்னதான் அதிகப்படியான சதைகள் இருந்தாலும் உடனே மாறி விடும், கச்சிதமான உடற்கட்டும் கிடைத்து விடும்!

(ஐ)

## புகை பிடிக்கும் பழக்கம் பெண்களிடமும் உண்டு

புகை பிடிப்பதை பெரும் பாவமாகக் கருதிய காலம் ஒன்று இருந்ததுண்டு. ஆனால் அது அந்தக் காலம்.

இப்பொழுதெல்லாம் புகை பிடிப்பது பெரிய பாவமே ஆகி விட்டது.

இந்தக் கால வாழ்க்கையில் இரண்டே இரண்டு இலட்சியங்கள் தானுண்டு. ஒன்று ஜீன்ஸ் அணிவது, இரண்டாவது பிடார் சிகரெட் பிடிப்பது. அதேமாதிரி இப்பொழுதெல்லாம் சிகரெட்டோ அல்லது பீடியோ பிடிக்காத இளைஞர்களே இல்லை எனலாம்.

இதையெல்லாம் வைத்துத் தான் புகை பிடிப்பது புருஷ லட்சணம் என்று ஒரு புது மொழியே புனையப்பட்டிருக்கிறது.

ஆண்கள் புகை பிடிப்பதென்பது, பரவலாகப் பழகிப் பெருகி விட்ட ஒன்று.

ஆனால் அண்மைக் காலத்தில் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு இவைகளுக்குப் பெயர் போன பெண்கள்கூட புகை பிடிக்க ஆரம்பித்து விட்டார்களே! இதை என்னென்பது?

வரவர பெரிய இடத்துப் பெண்கள் என்றால் புகை பிடித்தே ஆக வேண்டும் என்ற ஒரு நிலை பெரிதாகப் பரவி வருகிறது.

ஆடம்பர ஓட்டல்களில் நடக்கும் பார்ட்டிகளில் கலந்து கொள்ளும் செல்வச் சீமாட்டிகள் சிகரெட்டுகளை ஊதித்தள்ளுவதைப் பார்க்க வேண்டுமே!

அடுத்ததாக இன்றைய நாகரீகத்தின் எல்லையாகப் போற்றப்பட்டு வரும் டிஸ்கோவில் கலந்து கொள்ள வரும் நாரிமணிகள் தங்கள் செவ்விதழ்களில் இந்த சிகரெட்டுகளை வைத்து "தம்" அடிப்பதைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும்.

அது மட்டுமா?

இந்த நவநாகரிக நங்கைகள் தங்களுடன் வரும் ஆண் நண்பர்களுக்கு தமது வாயில் சிகரெட்டுகளை வைத்து பற்ற வைத்து தரும் பாங்கினைத் தான் என்னவென்பது!

ஒரு காலத்தில் ஆண்களே புகை பிடிக்க அஞ்சினார்கள். ஆனால், இன்றோ இந்தத் தாய்க்குலமோ லாவகமாக, ஸ்டைலாக, தைரியமாக புகை பிடிக்கிறது.! எல்லாம் காலத்தின் கோலம் தான்!

(ஜ-10)

## துண்டித்த நாக்கு ஒட்டிய அதிசயம்

துண்டிக்கப்பட்ட நாக்கை ஒட்ட முடியுமா? முடியுமென நிருபித்துக் காட்டியுள்ளார்கள் ஜெர்மனிய மருத்துவர்கள்.

ஜெர்மனியைச் சேர்ந்த 32 வயது ஆசிரியர் ஒருவரின் நாக்கு இனந்தெரியாத கொள்ளையர்களால் துண்டிக்கப்பட்டது.

பொலீஸாரின் உதவியுடன், துண்டிக்கப்பட்ட நாக்கை கண்டுபிடித்த ஜெர்மன் ஆச்சன் பல்கலைக்கழக மருத்துவமனையைச் சேர்ந்த பேராசிரியர் ஹெல்வேங் கோபேர்க் என்பவர் இந்நாக்கை மீண்டும் தைத்து ஒட்ட வைத்தார்.

ஓர் அங்குல நீளத்துக்கு மேல் துண்டிக்கப்பட்டிருந்த நாக்கை பொருத்துவதற்கு ஏழு மணித்தியாலங்கள் எடுத்தன.

சத்திர சிகிச்சை முடிவடைந்து ஒரு மாதத்துக்குப் பின்னர் நோயாளி வீட்டுக்கு அனுப்பப்பட்டார். பூரண குணமடைந்த அவர் வழமை போல் தெளிவாக உரையாடும் வாய்ப்பைப் பெற்றார்.

(ஏ-99)

## இலைகளை கொதிக்க வைத்து எரிபொருள் தயாரிப்பு

ஊசி இலை மரங்களின் இலைகளைப் பயன்படுத்தி பெட்ரோலைப் போன்ற எண்ணை தயாரிக்க முடியுமென அண்மையில் ஜப்பானில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



ஜப்பானிய நிலப் பகுதியில் சுமார் 68 சதவீதம் அதாவது சுமார் 2 கோடியே 40 லட்சம் ஹெக்டர் காடுகள் ஆகும். இதில் சுமார் ஒரு கோடி ஹெக்டர் நிலப்பரப்பில் ஊசி இலை மரங்கள் வளர்க்கப்படுகின்றன.

இவ்வகை மரத்தில் இருந்து எண்ணெய் தயாரிக்கும் நுட்பம் மிகவும் எளிமையானது. இலைகளையும், சிறிய குச்சிகளையும் சேகரித்து சிறு துண்டுகளாக வெட்டி சுமார் 200 லிட்டர் நீரில் போட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். இதிலிருந்து கிடைக்கும் நீராவியைக் குளிர வைத்தால் டர்பண்டைன் எண்ணெய் கிடைக்கும்.

எஞ்சிய திராவகத்தை ஒரு மருந்தாகவும், கழிவுப் பொருளை "கம்போஸ்ட்" உரமாகவும் பயன்படுத்தலாம்.

இந்த எண்ணெய்யை விவசாய காரியங்களுக்கான சிறிய வாகனத்தில் பயன்படுத்தினால் எவ்விதக் கோளாறுமின்றி அது இயங்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஊசி இலை மர இலைகளின் எண்ணெய்யைப் பயன்படுத்தி சாதாரண இயந்திரங்களை இயக்கலாம் எனக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

(ர)

## மது அருந்தி சாதனை

வட இங்கிலாந்தைச் சேர்ந்த பீட்டர் டுட்ஸ் என்பவர், உலக சாதனை ஒன்றை நிலைநாட்டினார். சாதனை என்ன தெரியுமா?

ஒரே நேரத்தில் அதிகளவு மது அருந்தியது அவர் செய்த சாதனை.

67 "ட்ராம்" விஸ்கிக்கு சமமான 33 பயின்ட் பியர் அருந்தினார். பின்னர் ஸ்வோர்த்போர்ப் வைத்தியசாலைக்கு அருகில், மயங்கிய நிலையில் நிர்வாணமாக விழுந்து கிடந்தார். பொலீஸார் அவரைக் கண்டு பிடித்தனர்.

பீட்டர் டுட்ஸ் அருந்தியிருந்த மதுவின் அளவு, சாதாரணமாக சாரதிகளுக்கு அருந்த அனுமதிக்கப்பட்டிருந்ததைப் போல் பதின்மூன்று மடங்காகும். இந்த அளவில் அரைவாசியை அருந்தினாலும் பலர் இறந்து விடுவார்கள்.

இவரது பெயரும் "கின்னஸ்" உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெறுமா?

(ஏ-99)

## காருக்குள் இசைக் கச்சேரி

ஜப்பானியர்கள் இசைப் பிரியர்கள். எந்தவொரு வைபவத்திலும் மனம் விட்டுப் பாட விரும்புபவர்கள். மதுபானசாலை நிலையங்களில் மேடையேறிப் பாட விரும்புபவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

பாட்டுப் பாடினால் அதற்குப் பின்னணி இசையும் தேவை அல்லவா?

பின்னணி இசையைப் பதிவு செய்த டேப்புகள் தாராளமாக அங்கு இருக்கின்றன. மேடையில் ஏறிப் பாடி, தமது திறமையைக் காட்ட விரும்புபவர்கள், தாம் விரும்பிய பின்னணி இசை டேப்புகளைத் தெரிவு செய்து, அவற்றை இசைக்கச் செய்து அதற்கேற்ப பாடுவதற்கு வசதி இருக்கிறது.

இவற்றையெல்லாம் கண்ணுற்ற டாக்ஸி சாரதி ஒருவர் தாமும் ஒரு புதிய முறையைக் கையாளத் தொடங்கியுள்ளார்.

தமது டாக்ஸியில் ஏறும் பிரயாணிகள், பிரயாணம் முடியும் வரை வாய் திறந்து மனந்திறந்து உரத்துப் பாடலாம். அதற்குரிய பின்னணி டேப்புகளும் உண்டு. மைக்கும் உண்டு.

இதனை அறிமுகப்படுத்திய நாளிலிருந்து அவரின் வருமானம் கூடி விட்டது. அத்துடன் டாக்ஸியை ஓட்டுவதில் அதிக ருசி பிறக்கிறதாம்.

ஒஸாக்கா நகரிலுள்ள டாக்ஸி சாரதியான மிச்சயோஷி சாட்டோ என்பவரே இப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்.

(ர)




துல்ரெக்ஸ் வழங்கும் விசேஷ சலுகை

மொத்த விற்பனைவிலையில் துல்ரெக்ஸ் துணிகள்.

உங்கள் அபிமான துல்ரெக்ஸ் துணிகள் குறிப்பிட்ட காலத்திற்கு மொத்த விற்பனை விலையிலேயே கிடைக்கிறது.

துணிகளின் வகைகளோ! வெள்ளை, வர்ணம், கவர்ச்சியான சாயமிட்டு அச்சிட்ட பப்ளின்கள், சன்போரைஸ்ட் சேட்டிங்குகள், கேம்பிறிக், பொலிநோசிக்/ அச்சிட்ட பருத்தி ஆடைத்துணிகள், பொலியெஸ்டர் சேட்டிங்குகள், சூட்டிங்குகள், ட்ரில் துணிகள், தளபாட விரிப்புக்கள், படுக்கை விரிப்புக்கள், ஏற்றுமதி மிகுதிகள் எனப் பல்வேறு வகைப்படும்.




கிடைக்குமிடங்கள்

துல்ரெக்ஸ் காட்சியறைகள்

294 காலிவீதி, கொழும்பு 4. அன்டர்சன் தொடர்மாடிகள், நாரஹென்பிட்டி, துல்ஹிரிய ஆலை, துல்ஹிரிய, வதக்காப்பொல

காட்சியறைகள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.

HTL TT 1324

சிந்தாமணி
சிந்தாமணி
தின வெளியீடு "தினபதி"
சிந்தாமணி ஞாயிறு வெளியீடு
CHINTAMANI

# சூரியனின் கரும்புள்ளிகளால் வெப்பநிலை அடிக்கடி மாற்றம்

வெப்பக் கோளமாகக் கனன்று கொண்டிருக்கிறது சூரியன். இது எல்லோருக்கும் தெரியும்.

சூரியனுடைய மேற்பரப்பின் வெப்ப நிலை அடிக்கடி மாறுகிறது. இந்த விஷயம் பலருக்குத் தெரியாது.

ஆறு வருடங்களுக்குப் பின் சூரியனின் மேற்பரப்பு கடந்த ஆண்டு மீண்டும் வெப்பமடையத் தொடங்கியது.

அமெரிக்காவிலுள்ள கிட்பீக் வானியல் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் வில்லியம் லிவிங்ஸ்டன் என்பவர் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

சூரிய மேற்பரப்பின் வெப்ப நிலை மாற்றத்தை இவர் 1975ஆம் ஆண்டு தொடக்கம் அவதானித்து வருகிறார். அப்போது சூரியனின் மேற்பரப்பு "குளிர்ச்சி" அடைந்திருந்தது.

1981ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வெப்ப நிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. இப்போது வெப்ப நிலை அதிகரித்து வருகிறது.

சூரியனின் வெப்ப நிலையில் இப்படியான மாற்றம் ஏற்படக் காரணம் என்ன?

சூரியனின் மேற்பரப்பில் சில கரும் புள்ளிகள் தோன்றுகின்றன. இப்புள்ளிகளை சூரிய களங்கங்கள் என்றும் சொல்வர்.



இவை கரிய நிறமுடையவையாக இருப்பினும் உண்மையில் அவை கறுப்பு நிறத்தவை அல்ல.

அனல் வீசும் வாயுக்கள் நிறைந்த பிரதேசங்களே இவை. ஆதலால் அவை ஒளியுடையவையாகவே இருக்கின்றன.

சூரியனின் மேற்பரப்பு 12,000 பாகை வெப்பமுடையது. இந்தப் புள்ளிகளோ 4,800 பாகை வெப்பமுடையவை. சூரியனின் மேற்பரப்பின் ஏனைய பாகங்களை விட இந்தப் புள்ளிகள் ஒளி குறைந்திருப்பதாலேயே அவை கரும் புள்ளிகளாகக் காட்சி தருகின்றன.

புகை படிந்த கண்ணாடி வழியாகப் பார்த்தால் இக்கரும் புள்ளிகளைக் காண முடியும்.

கரும் புள்ளிகளில் பல சிறியவை, சில மிகப் பெரியவை.

இந்தப் புள்ளிகள் இதே அளவில் நிலைத்து நிற்பதில்லை. அவை அடிக்கடி மாறுகின்றன.

1892இல் ஒரு மிகப் பெரிய கரும் புள்ளி தோன்றியது. அதன் நீள, அகலம் என்ன தெரியுமா?

நீளம் 1 லட்சத்து 50,000 மைல், அகலம் 75,000 மைல்.

1929இல் 7 லட்சம் மைல் நீளமுள்ள புள்ளி ஒன்று தோன்றியது.

சிறிய புள்ளிகள் சாதாரணமாக ஒரிரு தினங்களில் மறைந்து விடும். பெரிய புள்ளிகள் மறைவதற்கு 3 அல்லது 4 வாரங்கள் ஆகும்.

இந்தப் புள்ளிகளின் எண்ணிக்கையும், பரப்பும் சுமார் 11 ஆண்டுகளுக்கு ஒரு முறை அதிகரித்து பிறகு குறைகின்றன.

எண்ணிக்கையும், பரப்பும் அதிகரிக்கும் போது சூரியனின் மேற்பரப்பு வெப்ப நிலை தணிந்ததாகக் காணப்படும். மாறாக எண்ணிக்கையும், பரப்பும் குறையும் போது சூரியனுடைய மேற்பரப்பின் வெப்ப நிலை கூடி விடும்.

இப்போது கரும் புள்ளிகளின் எண்ணிக்கையும், பரப்பும் குறையத் தொடங்கியுள்ளன. அதனால் தான் சூரியனுடைய மேற்பரப்பின் வெப்ப நிலை அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது.

சூரியனில் கரும் புள்ளிகள் எப்படித் தோன்றுகின்றன?

சூரியனின் மத்தியிலிருந்து வெப்பக் காற்று மேற்பரப்பை நோக்கி வரும் போது, மேற்பரப்பானது புனலின் வாயைப் போல் விரிகிறது.

இப்புனலின் வாய்ப் பகுதியே கரும் புள்ளிகளாகக் காட்சி தருகின்றன. இக்கரும் புள்ளிகள் சூரியனின் மத்திய பாகத்திலேயே அதிகமாகக் காணப்படுகின்றன.

**— கர்ணன் —**

சூரியனின் மேற்பரப்பில் உள்ள ஒரு கரும் புள்ளியை "டெலஸ்கோப்" கண்ணாடி மூலம் ஆராய்ந்தால் அது இடமிருந்து வலமாக நகர்வதைக் காணலாம்.

பெரிய புள்ளிகள் சூரியனில் தோன்றும் போது, பூமியில் காந்தப் புயல்களும், வட துருவ அலிரோலித் தோற்றமும் ஏற்படுகின்றன.

சூரியப் புள்ளிகளுக்கும், உலகிலுள்ள உயிர்களுக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருப்பதாக பல ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

சூரியப் புள்ளிகள் அதிகமான காலத்தில் மழை அதிகமாகப் பெய்கிறது.

மேலும் இப்புள்ளிகள் அதிகமாக இருந்த காலங்களிலேயே உலகில் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன, அல்லது பெரிய பொருளாதார நெருக்கடிகள் தோன்றியிருக்கின்றன.

சூரியனுக்கும், பூமிக்கும் இடையிலுள்ள சராசரி தூரம் எவ்வளவு தெரியுமா? 9 கோடியே 28 லட்சத்து 70,000 மைலாகும்.

சூரியனின் குறுக்களவு சுமார் 8 லட்சத்து 64,100 மைல்.

பூமியின் மேற்பரப்பை போல் 12,000 மடங்கு மேற்பரப்பை உடையது சூரியன்.

அதன் கன அளவு பூமியைப் போல் 13 லட்சம் மடங்கு. அதாவது 13 லட்சம் பூமிகளைச் சூரியன் தன்னுள் அடக்கக் கூடியது.

★ சூரியனின் எடை

அதன் நிறை பூமியின் நிறையைப் போல் 3 லட்சத்து 32,000 மடங்கு. அதாவது 2,000,000,000,000,000,000,000, 000, 000 தொன். (சும்மா இருக்கும் போது கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்).

பூமி தன்னைத் தானே சுற்றுகிறது. இதற்கு ஒரு நாள் ஆகிறது. பூமியைப் போலவே சூரியனும் தன்னைத் தானே சுற்றுகிறது. இதற்கு சுமார் 4 வாரங்கள் ஆகின்றன.

புவிக் கவர்ச்சி விசையை விடச் சூரியனது கவர்ச்சி சுமார் 28 மடங்கு அதிகம். சாதாரணமாக பூமியில் ஒரு றாத்தல் எடையுள்ள ஒரு மனிதன் சூரியனின் மேற்பரப்பில் இரண்டு தொன் அதாவது 4,480 றாத்தல் எடையுள்ளவனாக இருப்பான்.

சூரியனின் மேற்பரப்பில் நாம் வசிக்க முடிந்தாலும் எமது கைகால்களை நம்மாலேயே தூக்க முடியாமல் இருக்கும்.

சூரியனின் மேற்பரப்பின் வெப்ப நிலை 12,000 பாகை மத்தியில் வெப்ப நிலையில் 4 கோடி பாகை. இந்த வெப்ப நிலையில் எல்லா உலோகங்களும் உருகி ஆவி நிலையாகி விடும்.

ஆதலால் ஒன்று மட்டும் நிச்சயமாகிறது. அதாவது சூரியன் திடப் பொருளாகவோ, திரவப் பொருளாகவோ இருக்க முடியாது.

அது ஆவியாகத்தான் இருக்க முடியும்.

சூரியனின் வயது சுமார் 450 கோடி வருடங்கள் என்று கூறப்படுகிறது.

சூரியனின் நிலை தொடர்ந்து இப்படியே இருக்குமா? இருக்காது என்கின்றனர் வானியலாளர்கள்.

இன்னும் 1,300 கோடி ஆண்டுகளுக்குப் பிறகு சூரியன் இப்போதைய அளவை விட 100 மடங்கு பெரியதாகி விடும். அப்படி ஒரு நிலை வரும் போது உலகில் ஜீவராசிகளே இருக்க மாட்டா.

ஆம்! உலகில் எத்தனையோ பேர் தெய்வமாக வழிபடும் இந்தச் சூரியன் ஒரு காலத்தில் நம்மையெல்லாம் அழிக்கத்தான் போகிறது என்கிறார்கள் விண்வெளி ஆய்வாளர்கள்.

(ர)

# ரோட்டில் பெய்த நோட்டு மழை

கலிபோர்னியாவில் ஓக்லாந்து என்ற இடத்தில் ஒருநாள் விந்தையான ஒரு மழை பெய்தது. பணநோட்டு மழைதான் அந்த விந்தையான மழை.

அந்த மழையால் சில மணிநேரத்துக்கு வாகனப் போக்குவரத்து தடைப்பட்டது.

வாகனங்களின் சாரதிகள், வாகனங்களை அப்படியே நடுப் பாதையில் நிறுத்திவிட்டு பரக்கப் பரக்கப் பாய்ந்து சென்று டாலர் நோட்டுகளைப் பொறுக்கிக் கொண்டார்கள். பாதசாரிகள் மாத்திரமன்றி, வீடுகளில் இருந்தவர்களும் விஷயத்தைக் கேள்விப்பட்டு தலை தெறிக்க ஓடி வந்தார்கள்.

கிடைத்த டாலர் நோட்டுகளால் பைகளை நிரப்பிக் கொண்டார்கள்.

இந்த நோட்டு மழை எப்படிப் பெய்தது என்று கேட்கிறீர்களா?

ஒரு வாகனம் வங்கிகளிலிருந்து டாலர் நோட்டுகளையும், நாணயங்களையும் ஏற்றிச் சென்றது. வீதியில் சமிக்ஞை விளக்கில் சிகப்பு எரிந்தது.

வாகனம் அங்கு தரித்து நின்றபோதுதான் அந்த விந்தை நடந்தது. கவனக் குறைவாக அடைக்கப்பட்டிருந்த வாகனத்தின் பின் கதவு திறந்து கொள்ள — டாலர் நோட்டுகள் வெளியே பறந்தன.

இல்லனவுக்கும் பச்சை விளக்கு எரிந்து,வாகனம் அங்கிருந்து புறப்பட்டு சென்ற பிறகு கூட வாகனச் சாரதி இந்த டாலர் "நோட்டு மழை" பற்றி எதுவும் அறிந்திருக்கவில்லை.

(ர-16)




## வளர்ந்தவர்கள் உடல் இச்சைக்கு பலியாகும் சிறுவர் சிறுமியர்

சிறுவர், சிறுமியர்களைப் பயன்படுத்தி வளர்ந்தவர்கள் தங்கள் உடல் இச்சையைத் தீர்த்துக்கொள்ளும் சம்பவங்கள் பிரிட்டனில் அதிகரித்து வருகின்றன.

பிரிட்டனில் பல முக்கிய பிரமுகர்கள் இந்தச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள்.

இந்தக் குற்றச் சாட்டுகள் பற்றி சட்டத் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் இப்போது ஆராய்ந்து வருகிறார்கள்.

குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கிறது.

இந்தப் பட்டியலை தாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதாக நாடாளுமன்ற உறுப்பினரான இயொப்ரி டிக்கன்ஸ் தெரிவித்தார்.

தெற்கு லண்டனில் அண்மையில் 10 வயதுச் சிறுவன் ஒருவன், இத்தகைய குற்றச் சாட்டுக்குப் பயன்படுத்தப்பட்டான். அவன் வெளியிட்ட தகவல் தேசிய ரீதியில் சலசலப்பை ஏற்படுத்தியது.

அதை அடுத்தே அரசாங்கம் இந்த விஷயத்தில் கூடுதல் அக்கறை செலுத்தி ஆராயத் தொடங்கியது.

பிரிட்டனின் பல பெரும் புள்ளிகள் இப்போதே நடு நடுங்கத் தொடங்கிவிட்டார்களாம். (ர).

CENTRAL BANK OF CEYLON

## வங்கிச் சேவைகள் பரீட்சை

இலங்கை மத்திய வங்கி/இலங்கை வங்கி
மக்கள் வங்கி/தேசிய சேமிப்பு வங்கி

### எழுதுவினைஞர், உதவிக்காசாளர் தேர்வு

இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றில் எழுதுவினைஞர்/உதவிக் காசாளர் ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான பரீட்சைக்குத் தோற்றுவதும் தகுதிவாய்ந்த, இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை மத்திய வங்கி — எழுதுவினைஞர்

1. கல்வித் தகைமைகள்

(1) ஒரே தடவையில் உ. பா. த / க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

அத்துடன்

சி. பா. த. ப./க. பொ. த. ப. (சாதாரணம்)/தே. க. த. பொ. பரீட்சை ஆகிய ஒன்றில் ஒரே தடவையில் எண்கணிதம் / வர்த்தக கணிதம்/கணிதம், சிங்களம்/தமிழ் உட்பட ஆறு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(II) க. பொ. த. ப. (உயர்தரம்) / சி. பா. த. ப. ஆகியவற்றிற்கு மேலான பரீட்சையில் சித்தி (ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் முதற் பரீட்சை / தகுதிக்கான பரீட்சை அல்லது உயர்தரப் பரீட்சை)

அத்துடன்

சி. பா. த. ப/க. பொ. த. ப(சாதாரணதரம்)/தே. க. த. பொ. பரீட்சை ஆகிய ஒன்றில் எண்கணிதம் / வர்த்தககணிதம் / கணிதம், சிங்களம்/தமிழ் உட்பட ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியெய்தி நான்கு திறமைச் சித்திகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

2. வயது

1983. 10. 10 ஆந் திகதி 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

சம்பள அளவு (அடிப்படை) - ரூ. 300 — ரூ. 520
4X15 உ.ம் 8X20

(மேலதிகமாக வாழ்க்கைச் செலவுப்படி, வாடகை மானியமும், ஏனைய விசேட படிகளும் திருமணப்படி (திருமணமானவராயிருப்பின்) வழங்கப்படும்.)

இலங்கை வங்கி
கனிஷ்ட எழுதுவினைஞர் பதவி/உதவிக் காசாளர்

மக்கள் வங்கி
எழுதுவினைஞர் பதவி

தேசிய சேமிப்பு வங்கி
எழுதுவினைஞர் பதவி

1. கல்வித் தகைமைகள்

(1) க. பொ. த. (உயர்தரம்) / உ. பா. த. பரீட்சை என்பவற்றில் ஒன்றில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

சி. பா. த. / க. பொ. த. (சாதாரணம்)/தே. க. த. பொ. பரீட்சை ஆகியவற்றில் ஒன்றில் எண்கணிதம்/வர்த்தக கணிதம்/கணிதம், சிங்களம் / தமிழ் உட்பட ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியெய்தி நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

2. வயது

1983. 10. 10 ஆம் திகதி 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

சம்பள அளவு
(அடிப்படை) ரூ. 270/- - ரூ. 545/-
5 X 15/- 10 X 20/-

(மேலதிகமாக வாழ்க்கைச் செலவுப்படி வாடகை மானியமும் ஏனைய விசேடபடி, திருமணப்படி (திருமணமானவராயிருப்பின்) வழங்கப்படும்)

மேல் குறிப்பிட்டுள்ள தகைமைகள் இல்லாத விண்ணப்பதாரர்கள் எவருக்கும் பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

இவ்வங்கிகள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடங்களைப் பொறுத்தே, தகுதி வாய்ந்தவர்களுக்கு அவ்வங்கிகளில் இடமளிக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகக் கொடுக்கப்படாததன் காரணமாக படிவங்களைத் தபால் மூலம் அனுப்புவதற்காக, சொந்த முகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட பெரிய அளவு உறை ஒன்றை நிருவனப் பணிப்பாளர், இலங்கை வங்கி ஊழியர் மாவத்தை, கொழும்பு 1 என்ற முகவரிக்கு 1983. 09. 30 திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

நிருவனப் பணிப்பாளர்,
இலங்கை மத்திய வங்கி

இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டவர்: சுயாதீனப் பத்திரிகையாளர் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (இலங்கை) தபால் பெட்டி 1613 வெளியிட்ட திகதி 11 செப்டம்பர் 1983.
Chintamani 5, Gunasena Mawata, Colombo 12, P. O. Box 1613.